தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

## 31.07.2013

**பண்ணை பசுமை கடைகளில் தக்காளி விலை குறைப்பு: தமிழக அரசு தகவல்**

சென்னையில் உள்ள பண்ணை பசுமை கடைகளில் தக்காளி விலை குறைக்கப்பட்டுள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

கூட்டுறவு சங்கத் தேர்தல்களில் தலைவர் மற்றும் துணைத் தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கான பயிற்சி சென்னையில் நடைபெற்றது. இந்த பயிற்சியைத் தொடங்கி வைத்து அமைச்சர் செல்லூர் கே.ராஜு பேசும்போது தக்காளி விலைக் குறைப்பு குறித்துத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் கூறியது:

கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் 31 பண்ணை பசுமை காய்கறிக் கடைகள் நடத்தப்படுகின்றன. இந்தக் கடைகளில் நாட்டு தக்காளியானது கிலோவுக்கு ரூ.20-லிருந்து ரூ.18 ஆகவும், பெங்களூர் தக்காளி கிலோ ரூ.30-லிருந்து ரூ.25 ஆகவும் குறைக்கப்படுகிறது.

பண்ணை பசுமை காய்கறிக் கடைகளில் ஜூலை 29-ஆம் தேதி நிலவரப்படி விற்பனை அளவு 755 டன்னாகும். இதன் மதிப்பு ரூ.2.82 கோடியாகும். ரூ.20-க்கு ஒரு கிலோ அரிசி விற்பனை செய்யும் திட்டத்தின் கீழ் இதுவரை 2 ஆயிரத்து 525 டன் அளவுக்கு ரூ.5.06 கோடி அளவில் விற்பனை செய்யப்பட்டுள்ளது என்று செல்லூர் கே.ராஜு தெரிவித்தார்.

**கால்நடை மருத்துவ முகாம்**

திண்டிவனம் அரிமா சங்கத்தின் சார்பில் கால்நடை மருத்துவமுகாம் ஜக்காம்பேட்டை ஊராட்சியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

அரிமா சங்கத்துடன் இணைந்து தமிழ்நாடு அரசு கால்நடை பராமரிப்புத்துறை நடத்திய கால்நடை மருத்துவமுகாமை சங்கத்தின் மண்டல தலைவர் ராஜாராம் தொடங்கி வைத்தார். அரிமா சங்க தலைவர் என்.விஜகுமார் தலைமை வகித்தார்.

நிகழ்ச்சியில், திண்டிவனம் கால்நடை பராமரிப்புத்துறையின் உதவி இயக்குநர் டாக்டர் சு.குருவையா தலைமையில் வந்த மருத்துவ குழுவினர் கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்தனர்.

அரிமா சங்க செயலர் கணேஷ்காந்தி, ஜக்காம்பேட்டை ஊராட்சி தலைவர் ஆர்.சித்ரா‌ராஜ், சிங்கனூர் ஊராட்சி தலைவர் ஜி.பார்த்திபன் உள்பட பலர் கலந்து கொண்டனர். மொத்தம் 150 கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

**உழவர் பாதுகாப்புத் திட்ட ஆலோசனைக் கூட்டம்**

திருச்சுழி தாலுகா அலுவலகத்தில் உழவர் பாதுகாப்புத் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்துவது தொடர்பான ஆலோசனைக் கூட்டம், மாவட்ட வருவாய் அலுவலர் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் அருப்புக்கோட்டை கோட்டாட்சியர், சமூக பாதுகாப்புத் திட்ட தனி துணை ஆட்சியர், வருவாய் ஆய்வாளர்கள் மற்றும் கிராம நிர்வாக அலுவலர்கள் உள்ளிட்ட வருவாய்த்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் உதவித் தொகைகள், அனைத்து கிராமங்களிலும் உள்ள பயனாளிகளுக்கு உரிய முறையில் சென்றடைய மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து வருவாய் ஆய்வாளர்கள் மற்றும்

கிராம நிர்வாக அலுவலர்களுக்கு மாவட்ட வருவாய் அலுவலர் அறிவுரை வழங்கினார்.

**அட்மா திட்ட விவசாயிகள் ஆலோசனைக் கூட்டம்**

செய்யாறை அடுத்த அனக்காவூரில் அட்மா திட்ட விவசாயிகள் ஆலோசனைக் கூட்டம் அனக்காவூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில்திங்கள்கிழமை நடைபெற்றது.

இக்கூட்டத்துக்கு தலைமை தாங்கிய உதவி இயக்குநர் எஸ்.ஏழுமலை, அட்மா திட்ட சிறப்பினை விவசாயிகளுக்கு எடுத்துக் கூறி அனைத்து விவசாயிகளும் பயன்பெறும் வகையில் இத்திட்டம் அமைய வேண்டும் என்றும் பண்ணைப்பள்ளி பயிற்சி குறித்த விவரங்களையும் விவசாயிகளிடையே தெரிவித்தார்.

**வடமேற்கு மாவட்டங்களில் மழையற்ற தன்மையே நீடிக்கும்**

தமிழகத்தின் வடமேற்கு மண்டல மாவட்டங்களில் தொடர்ந்து மழையற்ற தன்மையே நீடிக்கும் என்று நாமக்கல் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த மையம் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நாமக்கல் மாவட்ட வானிலையில் அடுத்த 3 நாள்களுக்கு (ஜூலை 31 முதல் ஆகஸ்ட் 2 வரை) வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் சில இடங்களில் 4 மிமீ வரை மழை பெய்ய வாய்ப்புள்ளது.

காற்றின் திசைவேகம் மணிக்கு 6 கிமீ முதல் 9 கிமீ வேகத்தில் மேற்கிலிருந்து வீசக்கூடும். வெப்பநிலை குறைந்தபட்சம் 75.2 டிகிரி பாரன்ஹீட் முதல் அதிகபட்சம் 95 டிகிரி பாரன்ஹீட் வரையும், காற்றின் ஈரப்பதம் குறைந்தபட்சம் 32 சதம் முதல் அதிகபட்சம் 69 சதம் வரையும் இருக்கும்.

கோழிப்பண்ணையாளர்களுக்கு..:பரவலாக பல மாவட்டங்களில் தென்மேற்குப் பருவமழை பெய்து வந்தாலும் தமிழகத்தின் வடமேற்கு மண்டலத்தில் தொடர்ந்து

மழையற்ற தன்மையே நீடிக்கும். எனவே, பகல் வெப்பம் 95 டிகிரி பாரன்ஹீட் முதல் 96.8 டிகிரி பாரன்ஹீட் வரை இருக்கும்.

இதனால், தீவன எடுப்பு இயல்பையொட்டியே நிலவும். ஓரிரு இடங்களில் லேசான வெப்ப அயற்சியும் காணப்படக்கூடும். பிற்பகலுக்கு மேல் வீசும் காற்றின் வேகத்தில் கோழிகளிடையே வெப்ப அயற்சி முழுமையாக நீங்கிவிடும்.

வேளாண் விவசாயிகளுக்கு..:தற்போது நிலக்கடலை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் விதைப்பு செய்து 40 முதல் 45ஆவது நாளில் ஏக்கருக்கு 80 கிலோ ஜிப்சம் இட்டு களை எடுத்து செடிகளுக்கு மண் அணைக்க வேண்டும்.

இதனால், மண்ணில் விழுதுகள் இறங்குவது எளிதாகி திரட்சியான காய்களைப் பெற முடியும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மேட்டூர் அணையின் நீர்மட்டம் உயர்வு:பொதுப் பணித் துறையினர் மகிழ்ச்சி**

மேட்டூர் அணையின் நீர்மட்டம்

40-ஆவது முறையாக 100 அடியைத் தொட்டதை அடுத்து, பரமத்திவேலூரில் பொதுப் பணித் துறையினர் விவசாயிகளுக்கு இனிப்புகள் வழங்கி மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டனர்.

கடந்த சில மாதங்களாக கடும் வறட்சியால் காவிரியில் நீர்வரத்து இல்லாமல் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தனர். இந்த நிலையில், கடந்த ஒரு மாதமாக கர்நாடக மாநிலத்தில் காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதையடுத்து, அங்குள்ள அணைகள் நிரம்பி, காவிரியில் திறந்துவிடப்படும் தண்ணீரின் அளவும் அதிகரித்து வந்தது.

இதைத்தொடர்ந்து, மேட்டூர் அணையின் நீர்மட்டமும் 100 அடியை ஞாயிற்றுக்கிழமை இரவு தொட்டது. இது 40-ஆவது முறையாகும். இதையடுத்து, பொதுப்பணித் துறையினர் திங்கள்கிழமை காலை, பரமத்திவேலூர் விருந்தினர்

மாளிகையில் விவசாயிகளுக்கு இனிப்புகள் வழங்கி மகிழ்ச்சியைக் கொண்டாடினர்.

இதில் பரமத்திவேலூர் மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த விவசாய சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

**"சம்பா சாகுபடிக்கு விதைகள் தயார்'**

திருச்சி மாவட்டத்தில் சம்பா சாகுபடிக்குத் தேவையான விதைகள் மற்றும் இடுபொருள்கள் தயார் நிலையில் இருப்பு வைக்கப்பட்டுள்ளன என்றார் மாவட்ட ஆட்சியர் ஜெயஸ்ரீ முரளிதரன்.

திருச்சி மாவட்டத்தில் சம்பா சாகுபடியை முழு அளவில் மேற்கொள்வதற்கான வேளாண்துறை, வேளாண் பொறியியல் துறை, கூட்டுறவு மற்றும் பொதுப்பணித்துறை அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

கூட்டத்துக்கு தலைமை வகித்து ஆட்சியர் பேசியது: காவிரி டெல்டா பானத்துக்கென மேட்டூர் அணையிலிருந்து ஆக. 2-ம் தேதி முதல் தண்ணீர் திறக்க முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.

திருச்சி மாவட்டத்தில் உள்ள 14 ஒன்றியங்களில் 8 ஒன்றியங்கள் காவிரி பாசனப் பகுதிகளின் கீழ் வருகின்றன. இந்தப் பகுதியில் இயல்பாக 11,500 ஏக்கரில் குறுவை சாகுபடி நடைபெறும். இந்த ஆண்டு தண்ணீர் இல்லாததால் 8,050 ஏக்கரில் சாகுபடி நடைபெற்றுள்ளது.

சம்பா பருவத்தைப் பொருத்தவரையில் வழக்கமான சாகுபடி பரப்பு 87,250 ஏக்கர். நிகழாண்டில் 92,250 ஏக்கரில் சாகுபடி நடைபெறுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு தேவையான அளவுக்கு சான்று பெற்ற நெல் விதை அனைத்து வேளாண் விரிவாக்க மையங்கள் மற்றும் தனியார் விற்பனையாளர்களிடமும், தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களிலும் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. இதில்

மத்திய கால ரகங்களான பி.பி.டி 5204, மேம்படுத்தப்பட்ட வெள்ளைப் பொன்னி, கோ.-43, அம்பை -19 மற்றும் ஆடுதுறை - 39 ஆகிய விதைகள் 462 டன் இருப்பு வைக்கப்பட்டுள்ளன.

தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தில் கிலோவுக்கு ரூ. 5 மானியத்துடனும், விதை கிராமத் திட்டத்தில் 50 சதவீத மானியத்துடனும் விதைகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. சம்பா பருவத்துக்குத் தேவையான யூரியா 6,494 டன், டிஏபி 4,597 டன், பொட்டாஷ் 3,365 டன் மற்றும் கூட்டு உரம் 6,158 டன் ஆகியவை தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கம் மற்றும் தனியார் உரக்கடைகளிலும் இருப்பு உள்ளன.

கட்டுப்பாட்டு அறை... விதைகள் மற்றும் உரங்கள் உரிய விலையில் விற்பனை செய்யப்படுகிறதா என்பதை கண்காணிக்க வேளாண் இணை இயக்குநர் அலுவலகத்தில் காலை 10 முதல் மாலை 5.45 மணி வரையில் கட்டுப்பாட்டு அறை செயல்படும். இதில் ஏதேனும் சிரமங்கள் இருந்தால் விவசாயிகள் 0431- 2420554 என்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம் என்றார் ஆட்சியர்.

கூட்டத்தில் வேளாண் துணை இயக்குநர் கே. பரசுராமன், இணை இயக்குநர் குருராஜ் சிங், கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப் பதிவாளர் ஜி. ராஜேந்திர பிரசாத், வேளாண் பொறியியல்துறை உதவி செயற்பொறியாளர் எஸ். சத்தியமூர்த்தி, பொதுப்பணித்துறை ஆற்றுப் பாதுகாப்புக் கோட்ட உதவி செயற்பொறியாளர் சிவக்குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**மேட்டூர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை மாலை 102.30 அடியாக இருந்தது.**

மேட்டூர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை மாலை 102.30 அடியாக இருந்தது.

அணைக்கு நொடிக்கு 73,194 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து நொடிக்கு 5,999 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

**குறுவை தொகுப்புத் திட்ட இடுபொருள்கள் வழங்கல்**

தஞ்சாவூரில் குறுவை சாகுபடி சிறப்புத் தொகுப்புத் திட்டத்தில் 30 விவசாயிகளுக்கு விலையில்லா இடுபொருள்கள் செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டன.

தமிழக அரசின் குறுவை சாகுபடி சிறப்புத் தொகுப்புத் திட்டத்தில் 5 விவசாயிகளுக்கு விலையில்லா எச்.டி.பி.இ. பைப் லைன் மற்றும் 25 விவசாயிகளுக்கு 1 ஏக்கருக்கு தேவையான இடுபொருட்கள், (8 பாக்கெட் உயிர் உரங்கள், 5 கிலோ நெல் நுண்ணூட்டம், 200 கிலோ ஜிப்சம் மற்றும் 1 லிட்டர் தாவர பூச்சிக்கொல்லி மருந்துகள்) ஆகியவற்றை தஞ்சாவூர் சட்டப்பேரவை உறுப்பினர் எம். ரெங்கசாமி வழங்கினார். திருவையாறு தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் எம். ரெத்தினசாமி, வேளாண் துறை இணை இயக்குநர் ஜெ. சேகர், வேளாண் கண்காணிப்பு அலுவலர் பிரபாகரன், ஒன்றியக் குழுத் தலைவர் ஜெ. லெட்சுமணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**"விவசாயிகளுக்கு தேவையான உரம் இருப்பு உள்ளது**

கர்நாடகத்தில் நிகழாண்டில் விவசாயிகளுக்குத் தேவையான உரம் இருப்பு உள்ளது என்று, அந்த மாநில விவாசாயத் துறை அமைச்சர் கிருஷ்ணேபைரே கெப்டா தெரிவித்தார்.

சட்ட மேலவையில் செவ்வாய்க்கிழமை பாஜக உறுப்பினர் கணேஷ் கார்னிக்கின் கேள்விக்குப் பதிலளித்து அவர் பேசியது:

மாநிலத்தில் விவசாயத்திற்கு தேவையான உரம் இருப்பு உள்ளது. இதுகுறித்து விவசாயிகள் கலக்கம் அடைய தேவை இல்லை. கர்நாடகத்தில் உரம் இருப்பு இல்லை என்ற வதந்தி பரவி வருகிறது. சுமார் 4 லட்சம் டன் உரம் தற்போது

இருப்பு உள்ளது. உரம் தயாரிக்கும் நிறுவனங்கள் உரத்தின் விலையை உயர்த்தியுள்ளன.

இதுகுறித்து அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும். தேவையைக் கருத்தில் கொண்டு, எந்த நிறுவனமும் விலை உயர்வை உடனடியாக அமல்படுத்தக் கூடாது.

உர விலையை உயர்த்துவது தொடர்பாக சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் முதலில் ஊடகங்களில் அறிவிப்பு வெளியிட வேண்டும் என்றார் அவர்.

**சில இடங்களில் மழை பெய்ய வாய்ப்பு**

தமிழகம் மற்றும் புதுச்சேரியின் ஒரு சில இடங்களில் புதன்கிழமை (ஜூலை 31) மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வானிலை முன்னறிவிப்பு: தமிழகம் மற்றும் புதுச்சேரியின் ஒரு சில இடங்களில் புதன்கிழமையன்று மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடும். சென்னையைப் பொருத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்ய வாய்ப்புள்ளது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**31.07.2013**

விவசாய மலர் செய்தி

### முயல் இறைச்சியின் சிறப்புக்கள்



மனிதர்களுக்குத் தேவையான புரதச்சத்து மிகுந்த உணவினை அளிப்பதில் வளர்ப்பு விலங்குகளின் பங்கு வெகுவாக இருந்து வருகின்றது. இத்தகைய வளர்ப்பு விலங்குகளிலிருந்து பெறப்படும் இறைச்சியானது பெருமளவு புரத அமிலங்களையும், கொழுப்பு அமிலங்களையும் மற்றும் கனிமச் சத்துக்களையும் உள்ளடக்கியுள்ளது. இறைச்சி என்பது முழுவதுமாகச் செரிக்கப்படக் கூடியதும், அனைத்துச் சத்துக்களையும் உள்ளடக்கிய ஒரு முழுமையான சரிவிகித உணவுப் பொருளாகும்.

இன்றைய மாறிவரும் உணவுப் பழக்க வழக்கங்கள், மேலைநாடுகளின் நாகரீக மோகம் மற்றும் மென்பொருள் தொழிலகங்களில் பணிபுரியும் இன்றைய யுவன்களும் யுவதிகளும் அதிக உடல் உழைப்பு இல்லாமல் உட்கார்ந்துகொண்டே செயல்படும் நிலையில் உள்ளனர். அதனால் எரிசக்தி அவர்களில் அவ்வளவாக செலவாவதில்லை. ஆனால் அதே சமயத்தில் எரிசக்தி நிறைந்த, கொழுப்புச்சத்து

அதிகம் கொண்ட உணவுப் பொருட்களை அதிகமாக எடுத்துக்கொள்கின்றனர். இதனால் அறுபது வயதில் வரவேண்டிய ரத்தக்கொதிப்பும், மாரடைப்பும், சர்க்கரை நோயும் புற்றுநோய்களும் அவர்களை இருபத்து ஐந்து வயதிலேயே ஆட்கொண்டு விடுகின்றன. இதனால் இன்றைய யுவன்களும் யுவதிகளும் தாங்கள் உட்கொள்ளும் உணவில் குறைவான கொலஸ்டிரால் கொண்ட இறைச்சி உணவுப் பொருட்களைக் கவனமாகத் தேர்ந்தெடுத்து உண்ண விரும்புகின்றனர். இத்தகைய குறைந்த உப்புச்சத்து மற்றும் எரிசக்தி குறைவான ஆனால் அதே சமயத்தில் உடல்நலத்தையும் அன்றாடத் தேவைக்குத் தேவையான எரிசக்தியைத் தரவல்ல உணவுப் பொருட்களைத் தேடி உண்கின்றனர். அத்தகைய யுவன்கள் மற்றும் யுவதிகளின் தேவையை பூர்த்தி செய்யும் விதத்தில் இன்று முயல் இறைச்சி உள்ளது என்று தாராளமாகச் சொல்லலாம்.

தற்பொழுது முயல் இறைச்சியில் உள்ள சத்துக்களையும் முயல் இறைச்சியின் சிறப்புக்களையும் பற்றி பார்ப்போம்.

**முயல் இறைச்சியின் சிறப்புக்கள்:**

* முயல் இறைச்சியானது இதர இறைச்சி வகைகளுடன் ஒப்பிடும்பொழுது மிகவும் குறைவான கொலஸ்டிரால் கொண்டது. அதாவது 100 கிராம் முயல் இறைச்சியில் 50 மில்லி கிராமே கொலஸ்டிரால் உள்ளது. அதே போல் முயல் இறைச்சியில் உப்புச்சத்தும் மிகவும் குறைவாகவே உள்ளது. அதாவது 100 கிராம் முயல் இறைச்சியில் 40 மில்லிகிராம் அளவே சோடியம் எனப்படும் உப்புச்சத்தும் உள்ளது.

* மற்ற இறைச்சிகளுடன் ஒப்பிடும்பொழுது முயல் இறைச்சியில் ஸ்டியரிக் மற்றும் பால்மிடிக் போன்ற செரிவான கொழுப்பு அமிலங்கள் குறைவாகவும், இதயத்தைப் பாதிக்காத பன்முனை கொழுப்பு அமிலங்களான லினோலியிக் மற்றும் லினோலினிக் அமிலங்கள் அதிகமாகவும் உள்ளன. எனவே ரத்தக்கொதிப்பு மற்றும் இதய நோய் உள்ளவர்களும் தாராளமாக முயல் இறைச்சியை தங்களது அன்றாட உணவில் சேர்த்துக்கொள்ளலாம்.

* மேலும் முயல் இறைச்சி எளிதில் செரிக்கவல்ல புரதச் சத்துக்களையும் கொண்டுள்ளது.

* நிக்கோட்டினில் அமிலம் (13 மி.கி/கி.கி. இறைச்சியில்) முயல் இறைச்சியில் அதிகம் உள்ளது. நமது அன்றாட உடல் தேவைக்கான கால்சியம் மற்றும் பாஸ்பரஸ் சத்துக்களும் தேவையான அளவு முயல் இறைச்சியில் உள்ளன.
* முயல் இறைச்சியின் உடல் எடையில் aressing Percentage 50 முதல் 60 சதவீதமாகும்.
* முயல் இறைச்சியில் சதைப்பகுதி மற்றும் எலும்பின் விகிதமானது 5: 1.2 ஆகும். கிட்டத்தட்ட உடற்கூடின் 70 சதவீதமானது உண்ணக்கூடிய இறைச்சியால் ஆனது ஆகும். சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைத்து வயதினரும் முயல் இறைச்சியினை எடுத்துக்கொள்ளலாம். ஏனென்றால் முயல் இறைச்சி நல்ல தரமான, எளிதில் செரிக்கவல்ல புரதச் சத்துக்களை தன்னகத்தே கொண்டுள்ளது.
* குளிர்காலம் மற்றும் கோடை காலம் என எல்லா பருவ காலங்களிலும் முயல் இறைச்சியை உண்ணலாம்.
* முயல் இறைச்சி உண்பதைத் தவிர்க்கக்கூடிய எந்த மதக் கோட்பாடுகளும் இல்லை.

முயல் இறைச்சியிலுள்ள சத்துப்பொருட்கள் இதர இறைச்சியிலுள்ள சத்துப் பொருட்களுடன் கீழ்க்கண்ட அட்டவணையில் ஒப்பிடப்பட்டுள்ளது. எனவே சுவை நிறைந்ததும் அதிக சத்துக்களையும் கொண்டமுயல் இறைச்சியினை தேவையான அளவு உண்டு இதயநோய், ரத்தக்கொதிப்பு இன்றி உடல்நலனைப் பேணிக்காத்து பயன்பெறுவோமாக..

**இறைச்சி - புரதம் (%) - கொழுப்பு (%) - நீர்ச்சத்து(%) - கொலஸ்டிரால் சோடியம்(100 கி/ கிராம்) - கால்சியம் (100 கி/ கிராம்) - பாஸ்பரஸ்(100 கி/ கிராம்)**

**முயல்இறைச்சி - 21 - 11 - 68 - 50 - 40 - 20 - 350**

**மாட்டிறைச்சி - 16 - 28 - 55 - 95-125 - 65 - 12 - 195**

**பன்றியிறைச்சி - 12 - 45 - 42 - 110 - 70 - 10 - 195**

**கோழியிறைச்சி - 20 - 11 - 67 - 60 - 70 - 10 - 240**

**ஆட்டிறைச்சி - 15 - 15 - 60 - 85-95 - 75 - 10 - 165**

*மருத்துவர் மூ.சுதா மற்றும் முனைவர் வெ.பழனிச்சாமி,*
*வேளாண் அறிவியல் நிலையம்,*
*குன்றக்குடி*

## நவீன தொழில்நுட்பம்



தீவனப்பற்றாக்குறைக்கு மர இலைகள்: மர இலைகளில் உள்ள ஊட்டச்சத்தின் அளவு வறட்சியினால் பாதிக்கப்படுவதில்லை. சுபா புல், கிளைரிசிடியா, அகத்தி, வாகை, வேம்பு, கொடுக்காப்புளி, கல்யாண முருங்கை போன்றமரங்களின் இலைகள் சிறந்த பசுந்தீவனங்களாகும்.

மற்ற பசுந்தீவனங்களைக் காட்டிலும் மர இலைகள் ஊட்டச்சத்து மிகுந்ததாக உள்ளன. பொதுவாக 10 முதல் 15 சதம் வரை புரதச்சத்தும், 40 முதல் 65 சதம் வரை மொத்த செரிக்கக்கூடிய ஊட்டச்சத்துக்களும் உள்ளன. (உலர் தீவன அடிப்படையில்) சூபாபுல், அகத்தி போன்ற மர இலைகளில் 20 -25 சதவீத புரதச்சத்தும் உள்ளன.

மர இலைகளின் புரதச்சத்து அசைபோட்டும் கால்நடைகளின் வயிற்றில் நுண்ணுயிர்களால் அவ்வளவாக சிதைக்கப்படுவதில்லை. அப்படி சிதைக்கப்படாத மீதமுள்ள புரதம் சிறுகுடலில் செரிக்கப்படுவதால் கால்நடைகளுக்கு சிறந்த பயனைக் கொடுக்கிறது. மரங்களின் காய்களும் புரதச்சத்து மிகுந்ததாக காணப்படுகின்றன.

இத்துடன் உயிர்ச்சத்து "ஏ'வும் மர இலைகளின் மூலம் கிடைக்கின்றது. அகத்தி,

முருங்கை, ஆச்சான் போன்ற மரங்களின் நார்ச்சத்து புற்களில் இருப்பதைவிட மிகக்குறைவாகவே இருப்பதால் இதன்மூலம் கால்நடைகளுக்கு கிடைக்கும் எரிச்சத்தும்குறைவாகவே இருக்கும். எனவே மர இலைகளையே முழுமையாயன பசுந்தீவனத்திற்கு மாற்றாக கால்நடைகளுக்கு தீவனமாக அளிப்பது நல்லதல்ல. மர இலைகளை நார்ச்சத்து மிக்க வேளாண் கழிவுகளுடன் சேர்த்து தீவனமாக அளிக்க வேண்டும். வேளாண் கழிவுகளை 1" - 2" அளவில் சிறு சிறு துண்டுகளாக வெட்டி நிலக்கடலைக்கொடி 75 சதவீதத்துடன் வேம்பு இலை அல்லது சவுண்டல் இலையை 25 சதவீதமாகவும் சோளத்தட்டை 50 சதவீதத்துடன் கிளைரிசிடியா, வேம்பு இலைகளை முறையே 25, 25 சதவீதமாகவும், கேழ்வரகு தட்டை 75 சதவீதத்துடன் கிளைரிசிடியா, வேம்பு இலைகளை முறையே 12, 13 சதவீதமாகவும் அளிக்க வேண்டும்.

அரிசி, கோதுமைத்தவிடுகளில் மணிச்சத்து சற்று அதிகமாக உள்ளது. எனவே மர இலை தீவனங்களுடன் எரிசக்தியாக புற்களையும், மணிச்சத்துக்காக தாவரங்களையும் சேர்த்து அளிப்பதால் ஓரளவு ஊட்டச்சத்துநிரம்பிய தீவனம் கால்நடைகளுக்கு கோடையில் கிடைக்கும்.

ஊட்டச்சத்து மிகுந்த மர இலைகளை சில கால்நடைகள் உண்ணத்தயங்கும். இதைத் தவிர்க்க:

* மர இலைகளைப் பிற புற்களுடன் சிறிது சிறிதாக சேர்த்து அளித்து கால்நடைகளுக்குப் பழக்கப்படுத்தலாம்.
* காலையில் வெட்டிய இலைகளை மாலை வரையும், மாலையில் வெட்டிய இலைகளை அடுத்தநாள் காலை வரையும் வாடவைத்து பயன்படுத்தலாம்.
* மர இலைகளை காயவைத்து அவற்றின் ஈரப்பதத்தை சுமார் 15 சதவீதத்திற்கும் கீழே குறைப்பதன்மூலம் அவற்றை நீண்டநாட்கள் சேமிக்க இயலும். தவிர இவற்றில் இருக்கும் நச்சுப் பொருட்களின் அளவும் கணிசமாக குறையும்.
* மர இலைகளின் வேம்(சந்தேகம்) சுமார் 2 சதவீத சமையல் உப்பு கரைசலைத் தயாரித்து தெளித்து அளிப்பதால் உப்புக்கலவையில் கவரப்பட்ட கால்நடைகள் இலைகளை விரும்பி உண்ணும்.
* மர இலைகளின்மீது வெல்லம் கலந்த நீரை ஓரி நாட்கள் தெளித்து அவற்றைக்

கால்நடைகளுக்கு அளிக்கலாம்.

* மர இலைகளை விரும்பி உண்ணும் கால்நடைகளையும் அருகருகே கட்டி மர இலைகளைத் தீவனமாக அளித்தால் இலைகளை உண்ணக்கூடிய கால்நடைகளைப் பார்த்து பிற கால்நடைகளும் உண்ண ஆரம்பிக்கும்.

மர இலைகள் தினமும் சிறிய அளவில் அளித்து அவற்றைப் பழக்கப்படுத்த வேண்டும். கால்நடைகள் ஒரே வகையான மர இலைகளை எப்போதும் விரும்புவதில்லை. தீவனம் அளிக்கும் சமயம் ஒன்றுக்கு மேற்படி இலைக் கலவையை அளிப்பது சிறந்தது. ஒரு கறவை மாட்டிற்கு நாள் ஒன்றுக்கு 8-10 கிலோ வரை மர இலைகளை அளிக்கலாம்.

ஆடுகளில் குறிப்பாக வெள்ளாடுகளுக்கு மர இலைக்கலவை இல்லாமல் தீவனம் அளிக்கவல்லது. 50 சதவீதம் புல் கலவையும், 20 சதவீதம் மர இலைக் கலவையும் கொடுப்பது அவசியமாகிறது.(தகவல்: முனைவர் எம்.முருகன், இயக்குநர், கோழியின உற்பத்தி மற்றும் வேளாண்மை நிலையம், ஓசூர்-638 110)

**-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்**

## கால்நடைகளில் பாம்புக்கடியும் நச்சுத்தன்மையும்

கால்நடைகளில் பல்வேறு நோய்கள் ஏற்பட்டு இறப்பது அனைவரும் அறிந்த ஒன்று. பாம்பின் விஷம் தீண்டி கால்நடைகளில் உயிரிழப்பு ஏற்படும். இதனால் கால்நடை வளர்ப்பேருந்து தாங்க முடியாத மனவேதனையும் பொருளாதார இழப்பீடும் ஏற்படுகிறது.

**விஷ பாம்புகள்:** 1. ராஜநாகம், 2. பங்காரஸ் கட்டுவிரியன், 3. கட்டு விரியனில் இருவகை உண்டு. இவை சாதாரண பங்காரஸ் சீருலஸ் மற்றும் குறுக்கு பட்டைகளைக் கொண்ட பங்காரஸ் பேசியேடஸ் எனப்படுவனவாகும். 4. வைப்பாரா ரஸ்ஸலை - கண்ணாடி விரியன், 5. எக்கிஸ் கேரினேட்டஸ் - சுருட்டை விரியன், 6. குரோட்டலஸ் - கிலுகிலுப்பை பாம்பு போன்ற பாம்புகள் விஷப்பாம்புகளாகும். டயாஸ் என்றழைக்கப்படும் சாரை பாம்பு விஷமற்ற பாம்பாகும்.

பொதுவாக ஆடுகள் காட்டில் மேயும்போது பாம்பினைப் பார்த்துவிட்டால் இரண்டு காதுகளையும் மேலே தூக்கிக்கொண்டு சிறிது அச்சத்துடன்

பார்த்துக்கொண்டிருக்கும். பிறகு இருப்பிடத்தை நோக்கி ஒடிவந்துவிடும். நல்லபாம்பு எதிர்க்கும் குணம் கொண்டதன்று. தம்மை சீண்டும்போது பல நேரங்களில் அச்சூழலில் இருந்து விடுவித்துக் கொள்ளவே முயல்கிறது. கால்நடையைத் தாக்கத் தயாராகும்போது இது கீழ்த்தாடையைக் கீழே இறக்கி வாயைத்திறந்து கோரைப் பற்களை நிமிர்த்தி தாக்கி உயிரியின் உடலில் நஞ்சை செலுத்திகொல்கின்றன.

**பாம்பின் நஞ்சு:** பாம்பின் நஞ்சு இரு வகைப்படும். ஒரு வகை நஞ்சு நரம்பு மண்டலத்தைத் தாக்கக்கூடியது. இதற்கு நியூரோ டாக்சின் என்று பெயர். நல்ல பாம்பின் விஷம் இவ்வகையைச் சார்ந்தது. இவ்விஷம் கால்நடையின் உடலில் ஏறியதும் பிரானிக் நரம்பு எனப்படும் உதரவிதான நரம்பினை பாதித்து உதரவிதானத்தை செயலிழக்கச் செய்கிறது. இதனால் சுவாசம் தடைபட்டு மரணம் சம்பவிக்கிறது. மற்றொரு வகை ரத்த ஓட்டத்தைத் தாக்கக்கூடியது. இதற்கு ஹீமோடாக்சின் என்று பெயர். கண்ணாடி விரியன்பாம்பின் நஞ்சு இவ்வகையைச் சார்ந்தது. இவ்விஷம் கால்நடைகளின்உடலில் சென்றதும் ரத்த சிவப்பு அணுக்களும் ரத்த நாளங்களும் சிதைக்கப்படுகிறது. இதனால் ரத்தம் ரத்தநாளங்களை விட்டு வெளியேறி திசுக்களுக்கு இடையில் உறைந்துவிடுகிறது. இதனால் கால்நடையானது மரணத்தை சந்திக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது.

1. கடிபட்ட கால்நடையை ஓடவைக்கவோ, விரட்டவோ கூடாது. ஒரு இடத்தில் கட்டி வைத்து அமைதிப்படுத்த வேண்டும்.

2. கால்நடை மருத்துவருக்கு உடனடியாக தகவல் கொடுத்து வரவழைப்பதற்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டும்.

3. கால்நடையைக் கடித்த பாம்பு எந்த வகையானது என்பதைக் காண நேரிட்டால் கால்நடை மருத்துவரிடம் கூறுவது மிகவும் அவசியமாகும்.

4. பாம்பு கடித்த இடத்தை தேடிக் கண்டுபிடித்து சுத்தமான தண்ணீர் மற்றும் கார்பாலிக் சோப்பு போட்டு கழுவ வேண்டும்.

5. கடிபட்ட இடத்தை கத்தியால் கீறி வாய் வைத்து உறிஞ்சக்கூடாது. ஏனெனில் வாய்ப்பகுதியில் புண் இருந்தால் ஆபத்து நேரிடும். கடிபட்ட இடத்தில் ஐஸ் கட்டியை வைக்கக்கூடாது.

6. கடிபட்ட இடத்திற்கு மேல் இறுக்கமாக கயிறை வைத்து கட்டக்கூடாது. அப்படிக் கட்டினால் கடிபட்ட இடத்தில் இருந்து கயிறு கட்டியிருக்கும் இடம் வரை விஷம் தேங்கி அந்தப்பகுதி முழுமையாக அழுகிவிடும். எனவே கயிறை ரத்த ஓட்டத்தை முழுமையாகத் தடை செய்யாதவாறு கட்டுப்போட வேண்டும். பாம்பினுடைய விஷத்தின் வீரியத்தைப் பொறுத்தே கால்நடைகளில் உயிரிழப்பு ஏற்படுகிறது.

7. கால்நடை மருத்துவர் வந்து கடித்த பாம்பிற்கான விஷமுறிவு மருந்தினை ஊசி மூலம் கால்நடையின் உடலில் செலுத்தும்போதுதான் கால்நடையானது உயிராபத்திலிருந்து மீளும். காலதாமதம் கால்நடையின் உயிருக்கே கேடு விளைவிக்கும்.

8. கால்நடையைக் கடித்தது விஷமற்ற பாம்பு என்று கால்நடை மருத்துவர் மூலம் அறியப்பட்டால் கடித்த இடத்தில் இதர கிருமிகள் உட்புகுந்து பின்னாளில ஏதேனும் கெடுதல் செய்யாமலிருக்க டெட்டனஸ் டாக்ஸைடு தடுப்பூசிப் போடுவது அவசியம்.

**கால்நடைப் பண்ணையில் பாம்பு வராமல் தடுப்பது எப்படி?**

கால்நடைப் பண்ணையைச் சுற்றி அடர்ந்த புதர்களையும் அடர்ந்த பூச்செடிகளையும் அகற்றுவது மிகவும் அவசியம். எலிகள் தவளை போன்றவற்றின் நடமாட்டத்தைப் பண்ணையில் கட்டுப்படுத்த வேண்டும். கால்நடைப் பண்ணைக்கு அருகாமையில் கோழிப்பண்ணை மற்றும் மீன் உள்ள குளங்கள் இருந்தாலும் பாம்புகளின் நடமாட்டம் அதிகம் தென்படும். பாம்புகளின் வாழிடங்களான கரையான்கள் விட்டுச்சென்ற கரையான் புற்றுகள், மரக்குவியல்கள், கற்குவியல்கள் போன்றவை கால்நடைப் பண்ணையின் அருகிலிருந்தால் இவற்றையும் களைய வேண்டும்.

**-கே.சத்தியபிரபா, உடுமலை.**

## இயற்கை விவசாயத்துக்கு ஊக்கம்மதுரை ஆதினம் வேண்டுகோள்

திருத்துறைப்பூண்டி: ""நாட்டிலுள்ள அனைவருக்கும் நஞ்சில்லா உணவு கிடைக்கும் வகையில், இயற்கை விவசாயம் மேற்கொள்ளும் விவசாயிகளை அரசு ஊக்குவிக்க வேண்டும்,'' என, மதுரை ஆதினம் அருணகிரிநாதர் கூறினார்.திருவாரூர்

மாவட்டம், திருத்துறைப்பூண்டி அருகே கச்சனம் கைக்கினேஸ்வரர் ஸ்வாமி கோவிலுக்கு மதுரை ஆதினம் அருணகிரிநாதர் நேற்றுக்காலை 11 மணிக்கு வந்தார். தொடர்ந்து, நிருபர்களுக்கு அவர் அளித்த பேட்டி:நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவன பங்குகளை தமிழக அரசு விலைக்கு வாங்கியது பாராட்டத்தக்கது. மதுரையில் 100 கோடி ரூபாய் செலவில் தமிழ்த்தாய் சிலை அமைக்க முதல்வர் ஜெ., உத்தரவிட்டுள்ளார். அம்மா உணவகம் மூலம் ஏழை, எளிய மக்களுக்கு குறைந்த விலையில் உணவு வழங்குகிறது. இப்பணிகள் பெரிதும் பாராட்டுக்குரியது.தமிழகத்தில் சட்ட ஒழுங்கு சரியான முறையில் உள்ளது. சில சதிக்கும்பல், தமிழகத்தில் ஆட்சிக்கு கெட்ட பெயரை ஏற்படுத்த இந்து அமைப்பினரை தாக்கி வருகின்றனர். மேட்டூர் அணையில் காவிரி பாசன விவசாயத்துக்கு ஆக.,2 ல் தண்ணீர் திறக்கப்படும் என, அரசு அறிவித்துள்ளது.இயற்கை உரத்தை பயன்படுத்தி விவசாயம் மேற்கொள்ள விவசாயிகளை அரசு ஊக்கப்படுத்த வேண்டும். நாட்டிலுள்ள அனைவருக்கும் நஞ்சில்லா உணவு கிடைக்க ஆவன செய்ய வேண்டும்.இவ்வாறு, அவர் கூறினார்.

### அனைத்து பகுதிக்கும் ஒகேனக்கல்குடிநீர்: விவசாயிகள் சங்கம் கோரிக்கை

ஓசூர்: "ஒகேனக்கல் கூட்டு குடிநீர் திட்டத்தில், அனைத்து பகுதிக்கும் குடிநீர் கிடைக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்' என, தேன்கனிக்கோட்டையில் நடந்த தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றினர்.மாநாட்டையொட்டி, தமிழ்நாடு விவசாயிகள் சங்க நிர்வாகிகள், விவசாயிகள் பங்கேற்ற பேரணி நடந்தது. தேன்கனிக்கோட்டை சுற்றுலா மாளிகையில் இருந்து துவங்கிய பேரணி, முக்கிய வீதிகள் வழியாக மாநாட்டு திடலை வந்தடைந்தது.மாநாட்டுக்கு, மாநில துணைத்தலைவர் லகுமையா தலைமை வகித்து, பேசினார். தளி எம்.எல்.ஏ., ராமச்சந்திரன் முன்னிலை வகித்தார். அகில இந்திய பொதுச்செயலாளர் அதுல்குமார் அஞ்சான், விவசாயிகள் சங்க மாநில தலைவர் எம்.எல்.ஏ., குணசேகரன் பேசினர்."ஒகேனக்கல் கூட்டு குடிநீர் திட்டத்தில் அனைத்து கிராமங்களுக்கும் குடிநீர் கிடைக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். வன விலங்குகள் பட்டியலில் இருந்து காட்டுபன்றியை நீக்க வேண்டும். விவசாய நிலங்களில்

புகுந்து அட்டகாசம் செய்யும் யானைகளை கட்டுப்படுத்த வனத்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும். யானைகள் உள்ளிட்ட வனவிலங்குகளால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் உடனுக்குடன் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்' உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றினர்.தமிழ்நாடு விவசாயிகள் மாநில செயலாளர் துரைமாணிக்கம், இ.கம்யூனிஸ்ட் கட்சி மாநில துணை செயலாளர் மகேந்திரன், மாநில நிர்வாக குழு உறுப்பினர்கள் திருமலை, லெனின், மாதர் சங்க செயலாளர் சுசீலா, மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் கிருஷ்ணப்பா, மாவட்ட குழு உறுப்பினர்கள் குடிமியான், இ.கம்யூனிஸ்ட் மாவட்ட செயலாளர் நஞ்சப்பா, ஓசூர் நகர செயலாளர் பயாஸ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## வறட்சியால் 9 தென்னை மட்டும் பாதிப்புதொடர் புகார் காரணமாக மறு கணக்கெடுப்பு

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில், வறட்சியால் ஒன்பது தென்னை மரங்கள் மட்டுமே பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக கூறி, நிவாரணம் வழங்கப்பட்டதற்கு, விவசாயிகள் கடும் புகார் தெரிவித்த நிலையில், மறுகணக்கெடுப்பு நடத்தப்படுகிறது.தமிழகத்தில், சென்னை மாவட்டம் தவிர, 31 மாவட்டங்கள் வறட்சியால், பாதிக்கப்பட்ட மாவட்டமாக அறிவிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட கலெக்டர் தலைமையில், வேளாண் துறை, வருவாய் துறையைச் சேர்ந்த குழு அமைக்கப்பட்டு, ஆய்வு நடத்தப்பட்டது. தஞ்சை உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களில் வறட்சி குறித்து முதல்கட்ட ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, உரிய நிவாரண நிதி, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, நேரடியாக வங்கி கணக்கு மூலம் வழங்கப்பட்டது.தொடர்ந்து மற்ற மாவட்டங்களிலும் வறட்சி குறித்த கணக்கெடுப்பு எடுத்து, நிவாரணம் வழங்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டதால், டெல்டா அல்லாத மாவட்டங்களிலும் வறட்சி குறித்த கணக்கெடுப்பு நடத்தப்பட்டு, நிவாரணம் வழங்கப்பட்டது.இந்நிலையில், ஈரோடு மாவட்டத்தில், ஈரோடு, பவானி, அந்தியூர், அம்மாபேட்டை, பெருந்துறை, சென்னிமலை, நம்பியூர், பவானிசாகர், சத்தி, தாளவாடி ஆகிய யூனியன்கள் அதிகமான வறட்சிக்கு இலக்காகியுள்ளன.இப்பகுதியில், நெல், கரும்பு, தீவனச்சோளம், ராகி, நிலக்கடலை, எள், ஆமணக்கு, துவரை, பாசிப்பயிறு, தட்டைப்பயிறு,

மரவள்ளிக்கிழங்கு ஆகியவை பயிரடப்படுகிறது. தென்னை மரங்கள், ஆறு, வாய்க்கால், ஏரி உள்ளிட்ட நீராதாரமுள்ள பகுதிகளில், அதிகமாக பயிரடப்பட்டுள்ளது.கடும் வறட்சியால், தென்னை மரங்கள் மட்டுமல்லாது, பனை மரங்களும் கருகியது என்பது குறிப்பிடத்தக்கது. அதிகாரிகளின் கணக்கெடுப்பின்படி, ஆறு தாலுகாவிலும், 78,308 ஏக்கர் விவசாய பகுதிகள் வறட்சியில், 25,769 விவசாயிகள் பாதிக்கப்பட்டனர்.அவர்களுக்கு, அரசின் நிவாரண நிதி உதவிப்பெற்று, 25 கோடியே, 27 லட்சத்து, 46 ஆயிரத்தை சம்மந்தப்பட்ட தொடக்க கூட்டுறவு வேளாண் வங்கிகள் மூலம், விவசாயிகளின் வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்டது.கணக்கெடுப்பில், மாவட்டத்திலேயே, ஒன்பது தென்னை மரங்களுக்கு மட்டுமே வறட்சி நிவாரணமாக, 1,480 ரூபாய் வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. விடுபட்ட பகுதியில், இரண்டாம் கட்ட கணக்கெடுப்பு நடத்தப்பட்டு, நிவாரணம் வழங்கப்பட்டது.இதற்கிடையே, தென்னை விவசாயிகள், அரசுக்கு தொடர் புகார் தெரிவித்ததால், மாவட்டத்தின், 14 யூனியனுக்கு உட்பட்ட கிராமங்களில், தென்னை பாதிப்பு குறித்து அதிகாரிகள் மறுகணக்கெடுப்பு நடத்தி வருகின்றனர். முழுகணக்கெடுப்பு முடிந்த பின், தென்னை விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்கப்படும், என வேளாண் அதிகாரிகள் தெரிவித்தனர்.

## விதை சங்க பொதுக்குழு

தாராபுரம்: தமிழ்நாடு விதை சங்கத்தின் பொதுக்குழு கூட்டம், சங்க தலைவர் ராமசாமி தலைமை வகித்தார்.பொருளாளர் ராமசாமி வரவேற்றார். ஆண்டறிக்கையை செயலாளர் காளிதாஸ் படித்தார். சங்கத்தின் புதிய நிர்வாகிகளாக தலைவர் ராமசாமி, செயலாளர் காளிதாஸ், பொருளாளர் ராமசாமி, துணைத்தலைவர் மகுடபதி, கோவிந்தசாமி, பாலசண்முகம், இணைச்செயலாளர் சஞ்சீவ்குமார், முருகசாமி, செயற்குழு உறுப்பினர்களாக இளங்கோ, செல்வம், பாஸ்கரன், சந்திரசேகரன், சுப்பிரமணியம், பாலுசாமி ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## பராமரிப்பு மானியம் வழங்கல்

ஈரோடு: சத்தியமங்கலத்தில் அனைவருக்கும் கல்வி இயக்க வட்டார வளமையம் சார்பில், 2013-14ம் ஆண்டுக்கான பள்ளி மானியம் மற்றும் பராமரிப்பு மானியம் வழங்கும் விழா நடந்தது.மாவட்ட பஞ்சாயத்து தலைவர் செல்வம், பவானி எம்.எல்.ஏ., சுந்தரம், நகராட்சி தலைவர் சுப்பிரமணியம், அரியப்பம்பாளையம் டவுன் பஞ்சாயத்து தலைவர் துரைசாமி, உதவி தொடக்க கல்வி அலுவலர் பொன்னுசாமி, மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பாபு ஆகியோர் பங்கேற்றனர். சத்தியமங்கலம் வட்டார வளமையத்துக்கு உட்பட்ட அரசு மற்றும் அரசு உதவி பெறும், 94 பள்ளிகளின் தலைமையாசிரியர்களிடம், பள்ளி மானியமாக, ஏழு லட்சத்து, 1,280 ரூபாய் மற்றும் பராமரிப்பு மானியமாக, ஏழு லட்சத்து, 24 ஆயிரத்து, 900 ரூபாய் என மொத்தம், 14 லட்சத்து, 26 ஆயிரத்து, 180 ரூபாய்க்கான காசோலையை வழங்கினர்.மேலும், மாற்றுத்திறன் கொண்ட ஆறு மாணவர்களுக்கு காதொலி கருவிகளும், சத்தியமங்கலத்தில் உள்ள தரம் உயர்த்தப்பட்ட அங்கன்வாடி மையங்களுக்கு "ஓடி விளையாடு பாப்பா' திட்ட விளையாட்டு பெட்டிகள் மற்றும் புத்தகங்கள் வழங்கப்பட்டன. ஏற்பாடுகளை சத்தியமங்கலம் வட்டார வளமைய மேற்பார்வையாளர் ஜோசப்சகாயராஜ் செய்திருந்தார்.

## காலாவதியாகிப்போன 47 டன் விதை நெல்தண்ணீர் திறப்பால் "ஆர்டர்கள்' எதிர்பார்ப்பு

கோபிசெட்டிபாளையம்: கோபி, வேளாண்மை உற்பத்தி மற்றும் விற்பனை சங்கத்தில் இருப்பு வைக்கப்பட்டிருந்த, 47 டன் ஐ.ஆர்., 20 ரக விதை நெல் காலாவதியாகி விட்டது. டெல்டா பாசனப்பகுதியில் இருந்து, 500 டன் விதை நெல் "ஆர்டர்' வரும் என்ற எதிர்பார்ப்பில் கோபி வேளாண் சங்கத்தினர் உள்ளனர்.மேட்டூர் அணையில் இருந்து டெல்டா பாசனத்துக்கு ஆக., 2ம் தேதி தண்ணீர் திறக்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. டெல்டா பாசனம் மூலம் சேலம், ஈரோடு, நாமக்கல், கரூர், திருச்சி, தஞ்சை, திருவாரூர், நாகை, புதுக்கோட்டை, பெரம்பலூர், கடலூர் உள்ளிட்ட, 11 மாவட்டங்களில், 16.5 லட்சம் ஏக்கர் வசதி பெறுகிறது.கோபி வேளாண் உற்பத்தி சங்கத்தில் இருந்து தமிழகம் முழுவதும்

விதை நெல் சப்ளை செய்யப்படுகிறது. நெல்லில் உள்ள கலப்படம், தரம் குறைவு போன்றவற்றை, வேளாண் உற்பத்தி சங்கத்தில் உள்ள "ஃபிரிக் கிளீனிர்' என்ற இயந்திரம் மூலம் தரம் பிரிக்கப்படுகிறது. ஏ.டி.டி., 45, ஏ.டி.டி.,39, , பி.பி.டி.,(டீலக்ஸ் பொன்னி), ஐ.ஆர்.20 போன்ற நெல் விதைகள் தரம் பிரிக்கப்படுகிறது. தரம் பிரிக்கப்பட்ட விதை நெல், மாநிலம் முழுவதும் சப்ளை செய்யப்படுகிறது.ஈரோடு மாவட்டத்தில் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்துக்கு தேவையான விதை நெல் சப்ளை செய்யப்பட்டுள்ளது. எல்.பி.பி., வாய்க்காலில் உயிர் நீர் மட்டும் திறக்கப்பட்டுள்ளது.மேட்டூர் அணை ஆக., 2 தேதி முதல் டெல்டாவுக்கு தண்ணீர் திறக்கப்பட உள்ளதால், கரூர் உள்ளிட்ட இடங்களில் இருந்து, 100 டன் விதை நெல் தேவை என ஆர்டர் கொடுக்கப்பட்டுள்ளது. டெல்டா பாசனங்களில் இருந்து, 500 டன் விதை நெல் ஆர்டர் வரும், என கோபி வேளாண் உற்பத்தி மற்றும் விற்பனை சங்கத்தில் எதிர்பார்ப்பில் உள்ளனர். தற்போதைய நிலவரப்படி, ஏ.டி.டி., 39 ரகம் இரண்டு டன், ஏ.டி.டி., 45 ரகம், 20 டன், பி.பி.டி., ரகம் ஒரு டன், ஏ.எஸ்.டி., 16 ரகம் இரண்டு டன் விதை இருப்பு உள்ளது. ஏ.டி.டி., 39 ரகம், ஐந்து டன் விதை நெல்லும், பி.பி.டி., விதை நெல், 10 டன் விதை நெல்லும் கொள்முதல் செய்ய உள்ளனர்.வேளாண் உற்பத்தி சங்க அதிகாரி ஒருவர் கூறியதாவது:கோபி வேளாண் உற்பத்தி சங்கம் சார்பில் விவசாயிகளிடம் இருந்து நேரடியாக நெல் கொள்முதல், விதை நெல் உற்பத்தி செய்யப்படுகிறது. ஏ.டி.39 ரகம் ஒரு கிலோ, 35 ரூபாய், ஏ.டி.டி.,45 ரகம் ஒரு கிலோ 35 ரூபாய், பி.பி.டி., ரகம் ஒரு கிலோ 38 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.டெல்டா பாசனங்களுக்கு ஐ.ஆர்.20, ஏ.எஸ்.டி., போன்ற விதை நெல் அதிகளவில் விற்பனையாகும். சென்ற ஆண்டு பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படாததால் ஐ.ஆர்., 20 ரகம், 47 டன் விதை நெல் இருப்பாகிவிட்டது. ஐ.ஆர்.20 விதை காலாவதியாகி விட்டதால், அரிசி ஆலைகளுக்கு ஏலம் விட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.டெல்டா பாசனத்துக்கு விரைவில் தண்ணீர் திறக்கப்பட உள்ளதால், டெல்டா பாசனப்பகுதியில், 500 டன் விதை நெல் ஆர்டர் கிடைக்கும் என எதிர்பார்க்கிறோம். ஆர்டர் கிடைத்தவுடன், விதை நெல் தயார் செய்து அனுப்ப வேண்டும், என்றார்.

## தேயிலையை ஏற்றுமதி செய்ய தர சான்றிதழ் அவசியம் விற்பனையும் அதிகரிக்க வாய்ப்பு

குன்னூர்:"தேயிலை ஏற்றுமதி செய்ய தொழிற்சாலைகள் ஐ.எஸ்.ஓ., உட்பட பிற சான்றிதழ் களை பெற வேண்டும்' என தேயிலை வாரியம் அறிவுறுத்தியுள்ளது.
நீலகிரியில் தேயிலை உற்பத்தியில், தனியார் எஸ்டேட்டுகள் பெரும் பங்கு வகிக்கும் நிலையில், 65 ஆயிரம் சிறு, குறு விவசாயிகள் தேயிலை தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.
தனியார் எஸ்டேட்கள், சொந்தமாக தொழிற்சாலை அமைத்து தேயிலை தூளை உற்பத்தி செய்கின்றன.
சிறு குறு விவசாயிகள் பறிக்கும் பசுந்தேயிலையை, தொழிற் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் மற்றும் தனியார் தொழிற்சாலைகள் கொள்முதல்செய்கின்றன.
மாவட்டத்தில், 15 இன்கோ தொழிற்சாலைகளும், 150 சிறு தேயிலை தொழிற்சாலைகளும் உள்ளன.
இந்த தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் தேயிலை தூளின் தரத்தை மேம்படுத்த தேயிலை வாரியம் மூலம் பல சலுகைகள் வழங்கப்படுகிறது.
விலை வீழ்ச்சி
கடந்த 2000ம் ஆண்டு நீலகிரி தேயிலைக்கு கடும் விலை வீழ்ச்சி ஏற்பட்டதால்,தேயிலை வாரியம் மூலம் தரம் மேம்பாட்டு முகாம்கள் நடத்தப்பட்டன.
இந்நிலையில், தற்போது நீலகிரி தேயிலை கடும் வீழ்ச்சியிலிருந்து மீண்டு வந்துள்ளதால் பசுந்தேயிலைக்கு நஷ்டமில்லாத விலை கிடைத்து வருகிறது.
இந்த சூழ்நிலையில்,கொச்சினில் நடந்த தேயிலை வாரிய கூட்டத்தில், "அனைத்து தேயிலை தொழிற்சாலைகளும் ஐ.எஸ்.ஓ., சான்றிதழ் பெற்றால் மட்டுமே மானியம் வழங்க முடியும்' என, முடிவு செய்யப்பட்டது."தேயிலை வாரியத்தின் இந்த முடிவை மறு பரிசீலிக்க வேண்டும்' என சிறு தேயிலை தொழிற்சாலை நிர்வாகிகள் தெரிவித்தனர்.
ஏற்றுமதியும், வருவாயும்
ஆனால், "தர சான்றிதழ் பெற்றால் தேயிலையை ஏற்றுமதி செய்வதுடன், தேயிலை

வாரியத்தின் சலுகைகளையும் சிறு விவசாயிகள் பெறலாம்'
என,தெரிவிக்கப்பட்டுள்ளது.
இது குறித்து தேயிலை வாரிய செயல் இயக்குனர் அம்பவாணன் கூறியதாவது:
சில தேயிலை தொழிற்சாலைகளில் "ஆர்தோடக்ஸ்' கழிவுகள், வண்ணப் பொடிகள் தேயிலையில் கலப்பது தெரிய வந்துள்ளது. அவ்வாறு செய்வது தவறாகும். இது குறித்து அனைத்து தொழிற்சாலைகளுக்கும் நோட்டீஸ் வினியோகிக்கப்பட்டுள்ளது. இத்தகைய கலப்படங்களில் ஈடுபடும் தேயிலை தொழிற்சாலைகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.
தேயிலை தொழிற்சாலைகள் "ஐ.எஸ்.ஓ.,-எச்.ஏ.சி.சி.பி.,-ரெயின்பாரஸ்ட் அலையன்ஸ்' ஆகிய தர சான்றிதழ்களை பெற வேண்டும். இத்தகைய தர சான்றிதழ்களை பெற்றால் தேயிலையை ஏற்றுமதி செய்யலாம். "ரெயின்பாரஸ்ட் அலையன்ஸ் தர சான்றிதழ்களை' பெற்றால் லண்டன் மற்றும் அரசு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாம்.
தர சான்றிதழ்களால் தேயிலைக்கு தரம் உயர்ந்து விற்பனை அதிகரிக்கும்.மேலும் தேயிலை வாரியம் மூலம் மானியம் மற்றும் பிற உதவிகள் கிடைக்கும். இவ்வாறு அம்பலவாணன் கூறினார்.

## துவரை உற்பத்தியை அதிகரிக்க முயற்சி : விவசாயிகளுக்கு சலுகை அறிவிப்பு

செய்யூர் : துவரை உற்பத்தியை அதிகரிக்க, ஒரு ஹெக்டேருக்கு, 7,500 ரூபாய் மதிப்பில் இடு பொருட்களும், ஒரு லட்சம் ரூபாய் மதிப்பில் சொட்டு நீர் பாசன குழாய்களையும் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்க, வேளாண்மை துறை முடிவு செய்துள்ளது.
தமிழ்நாட்டில், வேலூர், தருமபுரி, நாமக்கல், திருப்பத்தூர் போன்ற மாவட்டங்களில் மட்டும் தற்போது துவரை உற்பத்தி செய்யப்படுகிறது. காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஊடுபயிராக பயிரிடப்படுகிறது.
இருப்பினும், துவரை உற்பத்தி குறைவாக இருக்கிறது. கடந்த ஆண்டுகளில் சராசரியாக, ஆண்டுக்கு 4 டன் துவரை உற்பத்தி செய்யப்பட்டள்ளது.
ரகங்கள்
இந்நிலையில், பொதுவினியோகத்திற்கு தேவைப்படும் அளவிற்கு, துவரையை

உற்பத்தி செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில், துவரையை தனிப்பயிராக விவசாயிகள் பயிரிட ஊக்குவிக்கப் படுகின்றனர். இத்திட்டத்தில் கேஆர்ஜி 7, எல் ஆர்ஜி 41, வம்பன் ஆர்ஜி 3, ஐசிபிஎல் 87 போன்ற ரகங்கள் சிபாரி செய்யப் பட்டுள்ளன.

இந்த விதைகளை பயன்படுத்தி, மாவட் டத்தில் உள்ள 11 ஒன்றியங்களில், 524 ஹெக்டேர் பரப்பளவில் துவரை பயிரிட இலக்கு நிர்ணயிக் கப்பட்டுள்ளது.

ஒரு ஹெக்டேர் பயிர் செய்ய 15 ஆயிரம் செலவு ஆகும். ஒரு ஹெக்டேருக்கு 7,500 மதிப்புள்ள இடுபொருட்களும், சொட்டு நீர் பாசன குழாய்களும் இலவசமாக வழங்கப்பட உள்ளன.

இதன் மூலம், ஒரு ஹெக்டேர் நிலத்தில், குறைந்த பட்சம், 250 டன் என்ற அளவில் துவரை உற்பத்தியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

செலவு குறைவு

இதுகுறித்து, சித்தாமூர் வேளாண்மை துறை உதவி இயக்குனர் கலைமணி கூறுகையில், ""துவரையை பயிர் செய்வதன் மூலம் மண்வளம் காக்கப்படும். இது, செலவு அதிகம் இல்லாத பயிர் ஆகும். கூடுதல் உற்பத்தி பெற, துவரையை பயிரிடும் முறை குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்க உள்ளோம். இதன் மூலம், பயனடைய விரும்பும் விவசாயிகள் விருப்ப கடிதம் மட்டும் கொடுத்தால் போதும்,'' என, சித்தாமூர் வேளாண்மைத்துறை உதவி இயக்குனர் கலைமணி தெரிவித்தார்.

துவரை உற்பத்தி குறித்த மேலும் தகவல்களை அறிய, துணை இயக்குனர் அலுவலகம், வேளாண்மைத் துறை, காஞ்சிபுரம் என்ற முகவரியிலும், 93448 48234 என்ற அலைபேசி எண்ணிலும் விவசாயிகள் பெறலாம்.

## மரவள்ளி பயிர் விளைச்சல் அமோகம்

தியாகதுருகம்:மரவள்ளிக்கிழங்கு சாகுபடி பரப்பு குறைந்து, கிழங் கிற்கு நல்ல விலை கிடைப் பதால் விவசாயிகள் மகிழ்ச் சியடைந்துள்ளனர்.

தியாகதுருகம், ரிஷிவந்தியம் பகுதியில் 3 ஆண்டுக்கு முன்பு வரை சராசரியாக 1,000 ஏக்கர் பரப்பில் மரவள்ளி சாகுபடி செய்து லாபம் ஈட்டி வந்தனர். கரும்பு சாகுபடியில் விவசாயிகளின் கவனம் திரும்பியதால் மர வள்ளி பயிரிடுவது

குறைந்தது. கிணற்று பாசனம் ஆண்டு பயிராக மரவள்ளி சாகுபடி செய்வதால் கிணற்று நீர் பாசனத்தை நம்பியே பயிரிடப்படுகிறது. குறைந்த நீர் தேவை, பராமரிப்பு செலவு குறைவு, அறுவடை சிக்கல் இல்லாத பயிராக உள்ளதால் விவசாயிகளுக்கு சிரமமின்றி லாபம் ஈட்டித் தருகிறது. சேலம் மாவட்டம் ஆத்தூர் பகுதியில் உள்ள "சேக்கோ பாக்டரி' மூலம் அறுவடை செய்த கிழங்கு கொள்முதல் செய்யப்படுகிறது. கொள்முதல் செய்வோர், வயலிலேயே கிழங்கை அறுவடை செய்து லாரிகளில் எடுத்துச் செல்வதால் விவசாயிகளுக்கு வேலை மிச்சமாகிறது. விளைச்சல் அமோகம் தற்போது பெய்த மழையால் பயிரிட்டுள்ள மரவள்ளி செடிகள் செழித்து வளர்ந்து பசுமையாக உள்ளது. 100 கிலோ எடையுள்ள மரவள்ளி கிழங்கு மூட்டை 1,000 ரூபாய்க்கு விற்பனையாகிறது. இது விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

### மஞ்சளுடன் ஊடுபயிராக வெங்காயச்செடிகள்: விவசாயிகள் ஆர்வம்

கள்ளக்குறிச்சி:கள்ளக்குறிச்சி பகுதியில் மஞ்சள் பயிருடன் ஊடு பயிராக வெங்காயச் செடிகளை சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். கள்ளக்குறிச்சி மற்றும் சுற்று வட்டார பகுதியில் பல ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் ஆண்டுதோறும் செம்மை சாகுபடி முறையிலும், சாதாரண முறையிலும் விவசாயிகள் மஞ்சள் சாகுபடி செய்து வருகின்றனர்.

இதனையடுத்து தற்போது பொங்கல் பண்டிகை நேரத்தில் அறுவடை செய்யும் வகையில் மஞ்சள் பயிர் ஏராளமான ஏக்கர் விளை நிலங்களில் பயிரிடப்பட்டுள்ளன. மஞ்சள் விளைந்து அறுவடைக்கு தயாராகும், அதே நேரத்தில் அறுவடை செய்ய இயலும் வகையில் விளையும் வெங்காயத்தையும் அதற்கு ஊடு பயிராக விவசாயிகள் பயிரிட்டு வருகின்றனர்.

சென்ற ஆண்டு ஒரு குவிண்டால் மஞ்சள் 7,000 ரூபாய் முதல் 12 ஆயிரம் வரை விலை போனது. மேலும் வெங்காயம் தற்போது மார்க்கெட்டில் கிலோ 70 ரூபாய்க்கு மேல் விலை போகிறது.

இதனால் கள்ளக்குறிச்சி அடுத்த தென்கீரனூர், ஏமப்பேர், நைனார்பாளையம், கூகையூர், சிறுமங்கலம், பெருமங்கலம் பகுதிகளில் மஞ்சள் பயிருடன் ஊடுபயிராக வெங்காயச் செடிகளை சாகுபடி செய்யத் துவங்கியுள்ளனர்.

கள்ளக்குறிச்சி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் மஞ்சள் விற்பனைக்கு வார சந்தை நடத்தப்படும் நிலையில், அதே நேரத்தில் அறுவடைக்கு தயாராகும் வெங்காயத்திற்கும் அதிக விலை கிடைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.  இதனால் அதிகளவு விவசாயிகள் இதனை ஆர்வமுடன் பயிரிட்டு வருகின்றனர்.

### மேட்டூர் அணை நீர்மட்டம் 105 அடியானது

மேட்டூர்: மேட்டூர் அணை நீர்மட்டம் நேற்று, 105 அடியாக உயர்ந்த நிலையில், நீர்வரத்து நேற்று வினாடிக்கு, 61,233 கனஅடியாக சரிந்தது. காவிரியில் 10,000 கனஅடி தண்ணீர் பாசனத்துக்கு திறக்கப்பட்டுள்ளதால், அணை, சுரங்க, கதவணை மின் நிலையங்களில் மின் உற்பத்தி, 220 மெகாவாட் ஆக அதிகரித்துள்ளது.கர்நாடகாவின் கபினி, கே.ஆர்.எஸ்., அணை உபரி நீர் தொடர்ச்சியாக வருவதால் நேற்று முன்தினம், 101 அடியாக இருந்த மேட்டூர் அணை நீர்மட்டம் நேற்று, 105 அடியாகவும், 66 டி.எம்.சி.,யாக இருந்த நீர் இருப்பு, 70.5 டி.எம்.சி.,யாகவும் அதிகரித்தது.அணை நிரம்ப இன்னமும், 23 டி.எம்.சி., நீர் தேவை. நேற்று முன்தினம் வினாடிக்கு, 88,988 கனஅடியாக இருந்த நீர்வரத்து நேற்று வினாடிக்கு, 61,233 கனஅடியாக சரிந்தது. வினாடிக்கு, 10,000 கனஅடி நீர் பாசனத்துக்கு வெளியேற்றப்படுகிறது. நீர்வரத்து, வெளியேற்றத்தில் இதே நிலை நீடித்தால், நீர் இருப்பு நாள் ஒன்றுக்கு, 4 டி.எம்.சி., உயரும்.இந்நிலையில், காவிரி நீர்பிடிப்பு பகுதியில் பருவமழை தீவிரம் குறைந்ததால் நேற்று கே.ஆர்.எஸ்., உபரி நீர்திறப்பு, 39,700 கனஅடியாகவும், கபினி நீர்திறப்பு, 15,000 கனஅடியாகவும் குறைக்கப்பட்டது. இரு அணைகளில் இருந்தும், 54,700 கனஅடி நீர் திறக்கப்பட்டுள்ளது. வரும் நாளில் நீர்வரத்து குறையும் என்பதால், மேட்டூர் அணை நிரம்ப இன்னமும் ஐந்து நாட்களாகும்.நீர்மின் உற்பத்தி அதிகரிப்பு: மேட்டூர் அணையில் இருந்து வினாடிக்கு, 6,000 கனஅடி நீர் காவிரியில் திறக்கப்பட்டது. இதனால், மேட்டூர் அணை மற்றும் சுரங்க மின் நிலையங்களில், 60 மெகாவாட் மின் உற்பத்தி செய்யப்பட்டது.மேலும், மேட்டூர் முதல், கரூர் வரை, கொனூர், நெருஞ்சிப்பேட்டை, கோனேரிப்பட்டி, ஊராட்சிகோட்டை, அக்ரஹாரம், வெண்டிபாளையம் ஆகிய, ஆறு இடங்களில் காவிரி குறுக்கே கட்டியுள்ள

கதவணை மின் உற்பத்தி நிலையங்களில் தலா, 12 மெகாவாட் வீதம், 72 மெகாவாட் மின் உற்பத்தி செய்யப்பட்டது.இந்நிலையில், டெல்டா பாசனத்துக்கு நேற்று முன்தினம் மாலை முதல், வினாடிக்கு, 10,000 கனஅடி நீர் காவிரியில் வெளியேற்றப்படுகிறது. இதனால், மேட்டூர் அணை, சுரங்க மின் நிலையங்களில், 100 மெகாவாட் ஆகவும், கதவணை மின் நிலையங்களில் தலா, 20 மெகாவாட் வீதம், 120 மெகாவாட் ஆகவும் மின் உற்பத்தி அதிகரித்துள்ளது.இதன்மூலம் காவிரியில் வினாடிக்கு, 6,000 கனஅடி நீர் வெளியேற்றும்போது, 132 மெகாவாட் ஆக இருந்த நீர்மின் உற்பத்தி, நீர்திறப்பு, 10,000 கனஅடியாக அதிகரித்ததால், 220 மெகாவாட் ஆக அதிகரித்துள்ளது. ஆகஸ்ட், 2ம் தேதி, மேட்டூர் அணையில் பாசனத்துக்கு மேலும் கூடுதல் நீர் திறக்கப்படும்.

அப்போது காவிரியில் படர்ந்துள்ள ஆகாயதாமரைகள் ஷட்டர்களில் சிக்கி, மின் உற்பத்திக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்பதால், காவிரியில் தேங்கியிருந்த ஆகாயதாமரை நேற்று தண்ணீருடன் கொனூர் கதவணை மின் நிலைய எமர்ஜென்சி ஷட்டர்களை திறந்து, கீழ்பகுதியிலுள்ள காவிரியாற்றில் வெளியேற்றப்பட்டது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**31.07.2013**

## 2013-14ம் ஆண்டில் 75 கோழி பண்ணை அமைக்க ரூ1.55 கோடி நிதி ஒதுக்கீடு

பெரம்பலூர்: பெரம்பலூர் மாவட்டத்தில் 2013-14ம் ஆண்டில் 75 கோழி பண்ணை அமைக்க ரூ.1.55 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடந்து வருவதாக கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப்பணிகள் இயக்குனர் பழனிச்சாமி தெரிவித்துள்ளார்.பெரம்பலூர், அரியலூர் மாவட்ட கால்நடை பராமரிப்புத்துறை அலுவலர்கள் மற்றும் கால்நடை உதவி மருத்துவர்களுக்கு பணி திறனாய்வு கூட்டம் பெரம்பலூரில் நேற்று நடந்தது. கலெக்டர் தரேஸ் அஹமது முன்னிலை வகித்தார். கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப்பணிகள் இயக்குனர் பழனிச்சாமி பேசியதாவது: தமிழக அரசு கால்நடை பராமரிப்பு துறையின் மூலம் பல்வேறு பொருளாதார வளர்ச்சி திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இலவச ஆடுகள் வழங்கும் திட்டம் 2011-2012ம் ஆண்டு துவங்கப்பட்டு பெரம்பலூர் மாவட்டத்தில் 17 ஊராட்சிகளில் 954 பேருக்கு 3,816 ஆடுகள், 2012-2013ம் ஆண்டில் 24 ஊராட்சிகளில் 1,916 பேருக்கு 7,664 ஆடுகள் வழங்கப்பட்டது. 2013-2014ம் ஆண்டில் 29 ஊராட்சிகளில் 1,734 பேருக்கு ரூ.2.25 கோடியில் 6,936 ஆடுகள் வழங்க உத்தரவிட்டு இதுவரை 1,030 பேருக்கு ரூ.1.40 கோடியில் 4,120 ஆடுகள் வழங்கப்பட்டுள்ளது.

கால்நடைகளுக்கு ஏற்படும் தீவன பற்றாக்குறையை போக்க இறவையில் மாநில தீவன அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 2011-2012ல் 100 ஏக்கரில் தீவன பயிர் வளர்க்க 400 பேருக்கு ரூ.6.36 லட்சம் மானியம், 2012-2013ம் ஆண்டில் 200 ஏக்கரில் 800 பேருக்கு ரூ.24 லட்சம், 2013-2014ம் ஆண்டில் 350 ஏக்கரில் கோ3,

கோ4 தீவன பயிர்கள் வளர்க்க 1400 பேருக்கு ரூ.42 லட்சம் வழங்கப்பட்டது. மானாவாரி யில் தீவனசோளம் வளர்க்க 2012-2013ம் ஆண்டு 1,400 பேருக்கு ரூ.7.70 லட்சம் மானியம் வழங்கப்பட்டது. 2013-2014ம் ஆண்டில் விரைவுப்படுத்தப்பட்ட தீவன அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ஒரு நபருக்கு 0.25 ஏக்கரில் தீவனசோளம் மற்றும் தட்டைப்பயிர் வளர்க்க 2,000 பேருக்கு ரூ.40 லட்சம் மானியம், பாசன வசதி இல்லாத பிறமாவட்ட வறட்சி நிவாரண திட்டத்தின் கீழ் ஒரு நபருக்கு 0.5 ஏக்கர் வீதம் 2,000 பேருக்கு 1000 ஏக்கரில் தீவனசோளம் வளர்க்க ரூ.68 லட்சம் நிதி ஒதுக்கிடு செய்யப்பட்டுள்ளது.

நடுத்தர மக்களின் பொருளாதாரம் மேம்பட கோழிப்பண்ணை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் பெரம்பலூர் மாவட்டத்தில் 2012-2013ம் ஆண்டில் 5000 கோழிகள் கொண்ட 138 பண்ணைகள் அமைக்க ரூ.2.85 கோடி, 2013-14ம் ஆண்டு 75 பண்ணை கள் அமைக்க ரூ.1.55 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடந்து வருகிறது. இவ்வாறு கலெக்டர் தரேஸ் அஹமது தெரிவித்தார். டிஆர்ஓ சுப்ரமணியன் மற்றும் பெரம்பலூர், அரியலூர் மாவட்ட மண்டல இணை இயக்குனர்கள், துணை இயக்குனர்கள், பால்வள துணைப்பதிவாளர் கலந்து கொண்டனர். முன்னதாக பெரம்பலூர், குன்னம், வேப்பூர் பகுதிகளில் திட்ட பணிகளை கால்நடை பராமரிப்புத்துறை இயக்குனர் பழனிச்சாமி ஆய்வு செய்தார்.

**வாய்க்கால்கள் தூர்வாராததால் 1.5 லட்சம் ஏக்கர் சம்பா பாதிப்பு**

சிதம்பரம்: வாய்க்கால்கள் தூர்வாராததால் கடலூர் மாவட்டத்தில் 1.5 லட்சம் ஏக்கர் சம்பா சாகுபடி பாதிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. கர்நாடகாவில் அனைத்து அணைகளும் நிரம்பி வழிகிறது. இதன்காரணமாக உபரிநீர் திறந்துவிடப்படுவதால் மேட்டூர் அணை நிரம்பியுள்ளது. இந்தாண்டு சம்பா சாகுபடிக்கு ஆகஸ்ட் 2ம் தேதி மேட்டூர் அணை திறக்கப்படுகிறது. அதன்படி அணை திறக்கப்பட்டால் கல்லணை, கீழணை வழியாக வடக்குராஜன் வாய்க்கால் மூலம் கடலூர் மாவட்டம் வீராணம் ஏரிக்கு காவிரிநீர் வந்தடையும். அங்கிருந்து கான்சாகிப் வாய்க்கால், பொன்னேரி, பாசிமுத்தான் ஓடை மற்றும் பல

கிளைவாய்க்கால்களில் தண்ணீர் செல்லும். இதன் மூலம் சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் வட்டத்தில் 1.5 லட்சம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

முக்கிய நீர்வழி பாதையான வடக்கு ராஜன் வாய்க்கால், வடிகாலாகவும், பாசன வாய்க்காலாகவும் இருந்து வரும் கான்சாகிப் வாய்க்கால், பாசிமுத்தான் ஓடை பழையகொள்ளிடம் வாய்க்கால் ஆகியவை பொதுப்பணித்துறையின் பராமரிப்பு இல்லாதால் மண்மேடாக மாறி தூர்ந்து போயுள்ளது. தற்போது வாய்க்கால்களில் நாணல், புதர்கள், ஆகாயத்தாமரை செடி, நெய்வேலி காட்டாமணக்கு செடி மற்றும் கொடிகள் மண்டிக்கிடக்கிறது.

இதனால் பாசனத்துக்கு தண்ணீர் செல்லமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. வாய்க்கால்கள் தூர்வாரப்படாததால் கடைமடைவரை தண்ணீர் செல்லுமா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது. பெரிய பாசன வாய்க்கால்களே இந்த நிலையில் இருப்பதால், கிளை வாய்க்கால்களின் நிலை படுமோசமாக இருக்கிறது. தண்ணீர் வரத்து கேள்விக்குறியானதால் கடலூர் மாவட்டத்தில் சம்பா சாகுபடி கேள்விக்குறியாகியுள்ளது. கொள்ளிடம் வடிநில கோட்டத்துக்கு உட்பட்ட சிதம்பரம் பொதுப்பணித்துறை அதிகாரிகள் இது குறித்து எந்த அக்கறையும் எடுத்து கொண்டதாக தெரியவில்லை. மேட்டூர் அணை திறக்கப்படும் நிலையில் முக்கிய பாசன வாய்க்கால்கள் மற்றும் கிளை வாய்க்கால்கள் தூர்வாரப்படாதது விவசாயிகளிடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து விவசாயிகள் கூறுகையில், பொதுப்பணித்துறை அதிகாரிகளுக்கு பாசன வாய்க்கால்கள் எந்த நிலையில் இருக்கிறது என்று கூட தெரியவில்லை. நேரடியாக ஆய்வு செய்யவில்லை. பாசன வாய்க்கால்களை தூர் வார மனு கொடுத்தும் நடவடிக்கை எடுக்காமல் இருந்து வருகின்றனர். இதே நிலை தொடர்ந்தால் காவிரிநீர் கடைமடை வரை செல்லாது. எனவே பொதுப்பணித்துறையினர் பெரிய பாசனவாய்க்கால்கள் மற்றும் கிளை வாய்க்கால்களை பார்வையிட்டு தூர் வார வேண்டும் என்றனர்

**காய்கறி சாகுபடியில் விதை நேர்த்தி பயன்பாடு**

பெரம்பலூர்: பெரம்பலூரில் விவசாயிகளுக்கு காய்கறி சாகுபடியில் விதை நேர்த்தி பயன்பாட்டின் விளக்கம் அளிக்கப்பட்டது. பெரம்பலூர் தனலட்சுமி சீனிவாசன் மகளிர் கலை அறிவியல் கல்லூரி உயிர் தொழில்நுட்பவியல் மற்றும் உயர் தகவலியல் துறைகள் சார்பில் காய்கறி சாகுபடியில் உயிர் உரங்கள் என்ற தலைப்பில் பெரம்பலூர் உழவர்சந்தையில் புறப்பயன்பாட்டு நிகழ்ச்சி நடைபெற்றது. விவசாயிகள், காய்கறி சாகுபடியாளர்களிடம் சாகுபடி தொழில்நுட்பம், விதை நேர்த்தியின் பயன்பாடு, தரமான விதைகளை அடையாளம் காண்பது, நவீன தொழில்நுட்பம், கூடுதல் மகசூலுக்கான வழிமுறை, ரசாயன உரங்களால் ஏற்படும் பாதிப்பு, உயிர் உரங்களால் ஏற்படும் நன்மைகள் குறித்து முதுகலை இறுதியாண்டு மாணவிகள் விளக்கினர்.

தம்பிரான்பட்டி, வேலூர், சத்திரமனை, நொச்சியம், இரூர், பொம்மனப்பாடி, ரங்கநாதபுரம், பெரியவடகரை, வெண்பாவூர், விசுவக்குடி, முகமதுபட்டினம், எளம்பலூர், எசனை, கீழக்கரை, இரட்டைமலைசந்து ஆகிய பகுதிகளிலிருந்து உழவர்சந்தைக்கு காய்கறிகளை கொண்டு வந்து விற்பனை செய்யும் காய்கறி சாகுபடியாளர்கள், விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**முறைப்பாசனத்தை விவசாயிகள் தவிர்க்க தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்த பொதுப்பணித்துறை அறிவுறுத்தல்**

ஆண்டிபட்டி: முறைப்பாசனத்தை அமல்படுத்தாமல் இருக்க வேண்டுமானால் தண்ணீரை விவசாயிகள் சிக்கனமாக பயன்படுத்த வேண்டும் என வைகை அணை பொதுப்பணித்துறையினர் அறிவுறுத்தியுள்ளனர்.வைகை அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் சரிவர மழை இல்லை. முல்லைப்பெரியாறு அணையிலிருந்து திறக்கப்பட்டுள்ள தண்ணீர் வருவதால் வைகை அணை நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. நேற்று மாலை 5 மணி நிலவரப்படி 71 அடி உயரமுள்ள அணையின் நீர்மட்டம் 50.23 அடியாக உள்ளது. நீர்வரத்து வினாடிக்கு ஆயிரத்து 390

கனஅடியாக உள்ளது. அணையிலிருந்து வினாடிக்கு 60 கனஅடி தண்ணீர் குடிநீருக்காகவும், பாசனத்திற்காக 900 கன அடியும் திறக்கப்பட்டுள்ளது. கடந்த 15ம் தேதி முதல் தேனி, திண்டுக்கல், மதுரை மாவட்டங்களின் வைகை பழைய ஆயக்கட்டு முதல்போக பாசனத்திற்காக திறக்கப்பட்ட தண்ணீர் 4 மாதங்கள் தொடர்ந்து திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. தற்போது குடிநீருக்காக வினாடிக்கு 60 கனஅடி தண்ணீர் மட்டும் வழக்கம்போல் திறக்கப்பட்டுள்ளது. அணையில் நீர் இருப்பு 2 ஆயிரத்து 23 மில்லியன் கன அடியாக உள்ளது. முறைப்பாசனம் அமுல்படுத்தப்படாமல் இருக்க வேண்டுமானால் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும் என பொதுப்பணித்துறை பொறியாளர்கள் சார்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

பாசனத்திற்காக 5 நாட்களுக்கு அணை மூடப்பட்டு அதன் பின்பு 5 நாட்கள் அணை திறக்கப்படுவது முறைப்பாசனமாகும். பெரியாறு அணையின் நீர்மட்டம் 131.80 அடியாக உள்ளது. அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 2 ஆயிரத்து 253 கனஅடியாக உள்ளது. அணையிலிருந்து வினாடிக்கு ஆயிரத்து 708 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. அணையில் இருப்புநீர் 5 ஆயிரத்து 118 மில்லியன் கன அடியாக உள்ளது. வைகை அணையிலிருந்து திறக்கப்பட்ட தண்ணீர் மூலம் பயனடையும் பாசனப்பரப்பு 45 ஆயிரத்து 41 ஏக்கர் நிலங்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மழை அளவு விவரம் வருமாறு: (மிமீ அளவில்) பெரியாறு-9.4, தேக்கடி-4.1.

**மண் பரிசோதனை செய்தால் அதிக மகசூல் பெற முடியும் வேளாண் துறையினர் யோசனை**

ஆண்டிபட்டி: ஆண்டிபட்டி பகுதியில் தற்போதுள்ள சூழ்நிலையில் விவசாயிகள் மண்மாதிரி எடுத்து விவசாய பணிகளை மேற்கொண்டால் அதிக மகசூல் பெற முடியும் என வேளாண். துறையினர் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து வேளாண். துறையினர் கூறியதாவது:விவசாயிகள் தங்கள் நிலங்களில் உரங்கள் இட்டும், பூச்சி மருந்துகள் அடித்தும் எதிர்பார்த்த மகசூல் கிடைக்காத நிலை இருந்தால்,

தங்கள் நிலத்தின் மண்ணையும் பாசன நீரையும் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். மண் மற்றும் பாசனநீரில் உள்ள பிரச்னைகளை தெரிந்து அவற்றை சரி செய்தும், அதற்கேற்ப பயிர்களை தேர்வு செய்து கொள்ள வேண்டும்.
மண்ணில் உள்ள பேரூட்டம் மற்றும் நுண்ணூட்ட சத்துக்களின் அளவறிந்து அதற்கேற்ப சமச்சீர் உரமிடுங்கள். அதனால் உரச்செலவில் சிக்கனம் செய்வதோடு நல்ல விளைச்சலும் பெறலாம்.

மண் மாதிரி எடுக்கும் முறை: ஏக்கருக்கு 10 முதல் 15 இடங்களில் இருந்து மண் எடுக்க வேண்டும். தானிய பயிர்கள், எண்ணெய் வித்துக்கள் பயிறு வகைகளுக்கு அரை அடி ஆழத்திலும், கரும்பு, பருத்தி, வாழை, காய்கறிகளுக்கு முக்கால் அடி ஆழத்திலும், தென்னைக்கு 3 அடி ஆழத்திலும், பழ மரங்களுக்கு 3 முதல் 6 அடி ஆழத்திலும் மண் எடுக்க வேண்டும். சேகரித்த மண்ணை பங்கீட்டு முறையில் அரை கிலோ மண் வரும் வரை பங்கீடு செய்து துணிப்பை அல்லது பாலிதின் பையில் சேகரிக்க வேண்டும்.

மண் மாதிரி எடுக்க கூடாத இடங்கள்: மர நிழல், வரப்பு வயலோரம், தண்ணீர் பாயும் பகுதி, எரு கொட்டிய இடம், பயிர் வயலில் இருக்கும்போது எடுக்கக் கூடாது. மேலும் நுண்ணூட்ட மண் ஆய்வுக்கு மாதிரி சேகரிப்பதற்கு மண்வெட்டி, தட்டு போன்ற உலோகப்பொருட்கள் பயன்படுத்தக்கூடாது.
மரக்குச்சி கொண்டு மண் எடுக்க வேண்டும். பாசனநீர் பரிசோதனைக்கு மோட்டாரை 10 அல்லது 15 நிமிடங்கள் ஓடவிட்டு ஒரு லிட்டர் தண்ணீர் எடுக்க வேண்டும். இதனை பிடிக்க சுத்தமான கண்ணாடி அல்லது பாலிதின் பாட்டிலை உபயோகிக்க வேண்டும்.

மண்மாதிரி ஆய்வு செய்ய கட்டண விவரம்: மண்மாதிரி பேரூட்டம் ஆய்வு செய்ய ஒரு மாதிரிக்கு 10 ரூபாயும், நுண்ணூட்டம் ஆய்வு செய்ய ஒரு மாதிரிக்கு 10 ரூபாயும், பாசன நீர் ஆய்வு செய்ய 20 ரூபாயும் வசூலிக்கப்படும். மேற்கண்டவாறு மண்மாதிரிகளை சேகரித்து தங்கள் பகுதி வேளாண்மை அலுவலர்களிடமோ

அல்லது தேனியில் உள்ள மண் பரிசோதனை நிலையத்திலோ கொடுத்து பயன் பெறுமாறு ஆண்டிபட்டி வேளாண்மை உதவி இயக்குநர் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

**வேளாண். கடன் வழங்கியதில் சாதனை**

தேனி: தேனி மாவட்டத்தில் அரசு நிர்ணயித்த இலக்கை காட்டிலும் ரூ.3 கோடி வேளாண்மை கடன் வழங்கி சாதனை படைக்கப்பட்டுள்ளது.
தேனி மாவட்டம் வேளாண்மை சார்ந்த பகுதியாகும். கம்பம் பள்ளத்தாக்குப் பகுதியில் முல்லைப்பெரியாறு பாசனத்தை நம்பி நெல்விவசாயம் பெருமளவில் நடக்கிறது. இதுதவிர மாவட்ட அளவில் நெல், கரும்பு, வாழை, மா, தோட்டக்காய்கறிகள், மக்காச்சோளம், எள் உள்ளிட்ட விவசாயம் நடக்கிறது. மாவட்டத்தில் நடப்பு நிதியாண்டில் வேளாண் கட னாக விவசாயிகளுக்கு ரூ.70 கோடி வரை கடன் வழங்க தமிழக அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது.
கடந்த ஏப்ரல் முதல் ஜூன் வரை ரூ.13 கோடிக்கு கடன் வழங்க அரசு இலக்கு நிர்ணயித்திருந்தது. இதுவரை ரூ.16 கோடி அள விற்கு வேளாண்மை கடன் வழங்கப்பட்டுள்ளது. இதுதவிர தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களிலும், தனியார் உரக்கடைகளிலும் போதிய அளவில் உரம் இருப்பு வைக்கப்பட்டுள்ளன என கூட்டுறவு சங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

**அமராவதி அணையில் இருந்து பழைய ஆயக்கட்டு வாய்க்காலுக்கு பாசனநீர்**

கரூர்: அமராவதி அணையில் இருந்து பழைய ஆயக்கட்டு வாய்க்கால்களுக்கு பாசன நீர் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கரூரில் நேற்று நடந்த மக்கள் குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் மனு கொடுத்தனர்.கரூர் கலெக்டர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர் நாள் கூட்டம் நேற்று நடைபெற்றது. டிஆர்ஓ அருணா தலை மை வகித்து, மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து கோரிக்கை குறித்து பொதுமக்கள் வழங்கிய மனுக்களை பெற்றுக் கொண்டு சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளிடம் வழங்கி விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார்.இந்த குறைதீர் நாள் கூட்டத்தில், கரூர்

வட்டத்தில் சேர்ந்த 12 பேர், குளித்தலை வட்டத்தை சேர்ந்த 2 பேர் என 14 பேருக்கு முதியோர் உதவித்தொகைக்கான ஆணை களை மாவட்ட வருவாய் அலுவலர் அருணா வழங்கினார். தொடர்ந்து, இதில் சமூக பாதுகாப்பு திட்ட துணை ஆட்சியர் தெய்வேந்திரன், துணை ஆட்சி யர் கருணாகரன், சமூக பாதுகாப்பு திட்ட தனி தாசில்தார்கள் அம்பாயிரநாதன், ரவிச்சந்திரன், சிவக்குமார் உட்பட அனைத்து அரசு அலுவலர் கள் கலந்து கொண்டனர்.

விவசாயிகள் மனு: பள்ளபாளையம் ராசவாய்க்கால் பாசன விவசாயிகள் சங்க செயற்குழு உறுப்பினர்கள் டிஆர்ஓ அருணாவிடம் கொடுத்த மனுவில் கூறியிருப்பதாவது,தற்போது அமராவதி அணையின் நீர்மட்டம் 82 அடியாக உள்ளது. மேலும், நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்து வருவதால் அணை யின் முழு கொள்ளளவான 90 அடியை விரைவில் எட்டுவதற்கான வாய்ப்புகள் உள்ளன.இதேபோல அணை யின் பழைய ஆயக்கட்டு பாசன வாய்க்கால்கள் 25ல் திருப்பூர் மாவட்டத்தில் 10 வாய்க்காலுக்கு மட்டும் கடந்த ஒரு மாதமாக தண்ணீர் திறந்து பாசனம் பெறப்பட்டு வருகிறது. கரூர் மாவட்ட பழைய பாசன வாய்க்கால்கள் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருகிறது. பலமுறை பொதுப்பணித்துறை அதிகாரிகளிடம் முறையிட்டும் எந்த பயனும் இல்லை. தற்போது கரூர் மாவட்ட பாசன பகுதியில் மஞ்சள் பயிர் செய்வதற்கான சரியான ஆடிப்பட்டம் இது. எனவே, விவசாயிகள் அணையின் தண்ணீர் அளவை கருத்தில் கொண்டு மஞ்சள் பயிர் செய்வதற்காக வயல்களை செம்மைப்படுத்தி வருகின்றனர். கால்நடைகளுக்காக பயிர் செய்த சோளப்பயிர்கள் காய்ந்து கருகும் நிலையில் உள்ளன.

ஆடிப்பெருக்கு விரைவில் வரவுள்ளதால் மக்கள் திருவிழாவினை உற்சாகமாக கொண்டாடும் வகையில் உடனடியாக அமராவதி அணையில் இருந்து பழைய றஆயக்கட்டு வாய்க்கால்களுக்கு தண்ணீர் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**உளுந்தூர்பேட்டையில் விற்பனைக்கு குவிந்துள்ள ஓசூர் ரோஜா செடிகள்**

உளுந்தூர்பேட்டை: விழுப்புரம் மாவட்டம் உளுந்தூர்பேட்டை சென்னை-திருச்சி தேசிய நெடுஞ்சாலையின் மையப்பகுதியாக உள்ளது. இதனால் இங்கு தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் கிடைக்கும் பழங்கள் மற்றும் பல்வேறு பொருட்கள் மட்டுமின்றி ஓசூர் மற்றும் பெங்களூர் பகுதியில் இருந்து வரும் ரோஜாக்களின் விற்பனையும் அதிக அளவு நடைபெற்று வருவது வழக்கம். இதனால் தமிழகம் மட்டுமின்றி அருகில் உள்ள கர்நாடகா, ஆந்திரா உள்ளிட்ட பகுதிகளில் இருந்து பொருட்கள் விற்பனைக்கு வரும். இந்நிலையில் நேற்று காலை ஓசூர் மற்றும் பெங்களூர் பகுதியில் இருந்து கொண்டுவரப்பட்ட ரோஜா செடி உளுந்தூர்பேட்டை அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி அருகில் விற்பனைக்கு வந்தது.

அதில் ஊட்டி ரோஸ், பட்டன் ரோஸ், ஆஸ்லேன், ஜாதிமல்லி உள்ளிட்ட செடிகள் இருந்தது. சிவப்பு, மஞ்சள், வெள்ளை, இளம்சிவப்பு என 15 வண்ணங்களில் வந்த ரோஜா செடிகளை பள்ளி மாணவிகள் மட்டும் பொதுமக்கள் காலையில் இருந்தே கூட்டம் கூட்டமாகாக வந்து வாங்கி சென்றனர்.

இதுகுறித்து விற்பனையாளர் அருள் என்பவர் கூறியபோது, ஒரு செடியின் விலை ரூ.25 முதல் ரூ.30 வரையில் விற்பனை செய்கிறோம். உளுந்தூர்பேட்டை பகுதியில் அதிக அளவு ரோஜா விற்பனை ஏற்கனவே நடைபெற்றுள்ளதால் இந்த பகுதிக்கு ரோஜா விற்பனைக்காக வந்துள்ளோம் என கூறினார்.

**நிலக்கடலை சாகுபடி தீவிரம்**

தர்மபுரி, : தர்மபுரி மாவட்டத்தில் 1800 ஹெக்டேர் பரப்பளவிற்கு நிலக்கடலை, சூரியகாந்தி, எள் உள்ளிட்ட எண்ணெய் வித்து பயிர்கள் விளைவிக்கப்படுகின்றன. இதில் நிலக்கடலையில், 90 நாட்களில் மகசூல் கிடைக்கிறது. அரூர் மற்றும் பென்னாகரம் வட்டார பகுதிகளில் நிலக்கடலை அதிகமாக சாகுபடி செய்யப்படுகிறது. பென்னாகரம் வட்டத்தில் பாப்பாரப்பட்டி, பென்னாகரம்,

இண்டூர் பகுதிகளில் சுமார் 100 ஹெக்டேர் பரப்பளவில் நிலக்கடலை சாகுபடி நடந்து வருகிறது. பாப்பாரப்பட்டியில் நிலக்கடலைக்கு தற்போது களை எடுக்கும் பணி நடந்து வருகிறது.
தற்போது 70 கிலோ கொண்ட கடலை மூட்டை `2,500 விற்பனையாகிறது. ஒரு கிலோ நிலக்கடலை `30க்கு விற்பனையாகிறது.

**செந்துறையில் இன்று உழவர் பாதுகாப்பு திட்ட முகாம்**

அரியலூர்: செந்துறை தாசில்தார் அலுவலகத்தில் உழவர் பாதுகாப்பு திட்ட முகாம் இன்று நடக்கிறது.உழவர் பாதுகாப்பு திட்டத்தில் சிறு, குறு விவசாயிகள், விவசாய கூலி தொழிலாளர்களுக்கு கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, முதியோர் ஓய்வூதியத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. நலிவடைந்த விவசாய தொழிலாளர்களுக்கு ஓய்வூதிய தொகை, விபத்து நிவாரணத்தொகை, இயற்கை மரணத்திற்கான உதவித்தொகை, ஈமச்சடங்கு நிவாரண தொகை வழங்கப்பட்டு வருகிறது.

இந்த திட்டத்தில் பயன்பெறுவதற்காக உழவர் அட்டை வழங்கும் முகாம் நடந்து வருகிறது. அதன்படி செந்துறை தாசில்தார் அலுவலகத்தில் இன்று உழவர் பாதுகாப்பு திட்ட முகாம் நடக்கிறது. அரியலூர் தாசில்தார் அலுவலகத்தில் நாளையும், ஜெயங்கொண்டம் தாசில்தார் அலுவலகத்தில் 1ம் தேதியும் உழவர் பாதுகாப்பு திட்ட முகாம் நடக்கிறது. தகுதியுள்ள அனைவரும் உழவர் பாதுகாப்பு திட்டத்தில் இணைந்து உதவித்தொகை பெற்று பயனடையலாம். இவ்வாறு கலெக்டர் ரவிகுமார் தெரிவித்துள்ளார்.


**கரும்பு, நெற்பயிர்களை காலி செய்யும் மாடுகள் கலெக்டரிடம் கிராம மக்கள் புகார்**

சிவகங்கை: விவசாய பயிர்களை மாடு அழித்து நாசம் செய்வதாக கிராம மக்கள் கலெக்டரிடம் புகார் கொடுத்தனர்.சிவகங்கை அருகே பெரியகோட்டை, வி.புதுக்குளம், தெக்கூர், அய்யனார்புரம், வேம்பத்தூர், அழகாபுரி, லட்சுமிபுரம், வளையர் குடியிருப்பு, இடைக்காட்டூர் பகுதிகளைச் சேர்ந்த 100க்கும் மேற்பட்ட

கிராம மக்கள் நேற்று சிவகங்கை கலெக்டர் அலுவலகத்திற்கு வந்தனர். பின்னர் விவசாய பயிர்களை நாசப்படுத்தும் மாடுகளை கட்டுப்படுத்த வலியுறுத்தி சிவகங்கை கலெக்டர் ராஜாராமனிடம் மனு கொடுத்தனர். அந்த மனுவில் கூறியிருப்பதாவது: எங்கள் கிராமங்களுக்கு அருகில் உள்ள வைரவன்பட்டி, கோனேரி, கல்லுப்பட்டி, எரும்புகுடி பகுதியைச் சேர்ந்த சிலரது மாடுகள் அவிழ்த்து விடப்பட்டுள்ளன. இவைகள் இரவு, பகலாக எங்களது விவசாய பயிர்களை அழித்து நாசமாக்கி வருகின்றன.

இதனால் நாங்கள் எந்நேரமும் நிலங்களை பாதுகாக்க வேண்டிய நிலை உள்ளது. மற்ற வேலைகளுக்கும் செல்ல முடியவில்லை. இதுதொடர்பாக அக்கிராமத்தைச் சேர்ந்த முக்கியஸ்தர்களிடம் முறையிட்டும் நடவடிக்கை இல்லை. ஏற்கனவே வறட்சியால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளோம். பம்புசெட் மோட்டார் மூலம் கரும்பு, நெல் போன்ற பயிர்களை பயிரிட்டுள்ளோம். விவசாயமே எங்களுக்கு வாழ்வாதாரமாக உள்ளது. எனவே மாடுகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிட்டால் நாங்கள் ஊரை விட்டு காலி செய்ய வேண்டிய நிலை ஏற்படும். இவ்வாறு அந்த மனுவில் கூறப்பட்டிருந்தது.

**கரையோர மக்களுக்கு தண்டோரா எச்சரிக்கை மேட்டூர் நீர்மட்டம் 104 அடியாக உயர்ந்தது**



மேட்டூர்: கர்நாடக மாநிலத்தில் தென்மேற்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ளது. இதனால் கபினி, கிருஷ்ணராஜசாகர் உள்ளிட்ட முக்கிய அணைகள் நிரம்பி உள்ளன. இரு அணைகளில் இருந்தும் 2 நாட்கள் ஒரு லட்சம் கன அடி அளவுக்கு

உபரி நீர் திறந்து விடப்பட்டது. இந்நிலையில், கடந்த 27ம் தேதி முதல் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை அளவு குறைந்ததால் இரு அணைகளில் இருந்தும் நீர் திறப்பு வினாடிக்கு 65 ஆயிரம் கன அடியாக குறைக்கப்பட்டுள்ளது. இதனால், மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவும் குறைந்துள்ளது. நேற்று முன்தினம் காலை வினாடிக்கு 88,984 கன அடியாக இருந்த நீர்வரத்து, நேற்று காலை 61,233 கன அடியாக குறைந்தது. அணையில் இருந்து குடிநீர் மற்றும் ஆடிப்பெருக்கு அன்று மக்கள் நீராடுவதற்கு வசதியாக நேற்று முன்தினம் மாலை முதல் வினாடிக்கு 10,800 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

நீர்வரத்தை விட திறப்பு குறைவாக இருப்பதாலும், டெல்டா பாசனத்துக்கு இன்னும் தண்ணீர் திறக்கப்படாததாலும், அணையின் நீர்மட்டம் மளமளவென உயர்ந்து வருகிறது. நேற்று முன்தினம் காலை 101 அடியாக இருந்த நீர்மட்டம், நேற்று காலை 104.22 அடியாக அதிகரித்தது. நீர்மட்டம் ஒரே நாளில் 3.22 அடி உயர்ந்துள்ளது. அணை யின் நீர் இருப்பு 70.41 டிஎம்சி. தண்டோரா: மேட்டூர் அணையின் நீர்மட்டம் 104 அடியை தாண்டியதாலும், அணைக்கு நீர்வரத்து தொடர்ந்து அதிகமாக இருப்பதாலும், 16 கண் மதகு வழியாக உபரிநீர் வெளியேறும் பகுதியில் உள்ள தங்கமாபுரிபட்டணம், தொட்டில் பட்டி, சேலம் கேம்ப், பூலாம்பட்டி காவிரி கரையோர பகுதியில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு நேற்று முன்தினம் வருவாய் துறையினர் தண்டோரா மூலம் எச்சரித்தனர்.

தமிழக&கர்நாடக எல்லையில் பிலிகுண்டுலு பகுதியில் காவிரி ஆற்றில் நீர்வரத்து படிப்படியாக சரிந்து வருகிறது. நேற்று முன்தினம் வினாடிக்கு 76,000 கனஅடியாக இருந்த நீர்வரத்து நேற்று காலை நிலவரப்படி வினாடிக்கு 75,000 கனஅடியாக சரிந்தது. கடந்த 27ம் தேதி வினாடிக்கு 81,400 கனஅடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. இது நடப்பு ஆண்டில் அதிகபட்ச அளவாகும்.நீர்வரத்து அதிகரிப்பின் காரணமாக நேற்று 10வது நாளாக ஒகேனக்கல் காவிரி ஆற்றில்

குளிக்கவும், அருவிகளில் குளிக்கவும் தடை நீடித்தது. இதனால், சுற்றுலா பயணிகளின் வரத்து வெகுவாக குறைந்துள்ளதால் ஒகேனக்கல் வெறிச்சோடியது.

**பண்டிகை காலம் தேங்காய் எண்ணெய் விலை உயர வாய்ப்பு**



கொச்சி : கேரளாவில் ஓணம் பண்டிகை தொடங்க இருப்பதால் தேங்காய் எண்ணெய் தேவை அதிகரித்து விலை உயர வாய்ப்பு உள்ளது என்று ஆய்வில் தெரியவந்துள்ளது.
தேங்காய் மேம்பாட்டு வாரியம் கேரளா, தமிழ் நாடு, கர்நாடகா ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த பல்வேறு கல்வி நிறுவனங்களுடன் இணைந்து 2012,13ம் ஆண்டில் தேங்காய் உற்பத்தி குறித்த ஆய்வை மேற்கொண்டன. ஆய்வு விவரம்:

தமிழ்நாடு, கர்நாடகா ஆகிய மாநிலங்களில் தேங்காய் உற்பத்தி குறைந்ததால் கேரளா விவசாயிகளுக்கு அதிக பலன் கிடைத்துள்ளது. தமிழ்நாட்டில் தேங்காய் உற்பத்தி 16 சதவீதமும், கர்நாடகாவில் 12 சதவீதமும் குறைந்துள்ளது. கேரளாவில் ஓணம் பண்டிகையும், அடுத்தடுத்த பல பண்டிகைகளும் வர இருப்பதால் தேங்காய் எண்ணெய் தேவை அதிகரித்து குவிண்டால் ரூ.7000 அல்லது அதற்கு மேல் உயர வாய்ப்பு உள்ளது.

கொப்பரை விலை தமிழகத்தில் குவிண்டால் ரூ.4,700லிருந்து ரூ.4,750 ஆகவும், கேரளாவில் ரூ.4,800 லிருந்து ரூ.4,850 ஆக உயரவும் வாய்ப்பு உள்ளது. இவ் வாறு ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**31.07.2013**

**பண்ருட்டி பகுதியில் கொய்யாபழம் விலை குறைவால் விவசாயிகள் கவலை**

பண்ருட்டி,

பண்ருட்டி பகுதியில் கொய்யாபழம் விலை கடுமையாக குறைந்துள்ளதால் விவசாயிகள் பெரும் கவலை அடைந்துள்ளனர்.

அறுவடை

பண்ருட்டி அருகே சின்னப்பேட்டை, புதுப்பேட்டை, மணம் தவிழ்ந்தபுத்தூர், ராசாப்பாளையம், திருத்துறையூர், திராசு, குச்சிபாளையம், ஒறையூர், சேமங்கலம், ஆனத்தூர் உள்பட 35–க்கும் மேற்பட்ட கிராமங்களில் விவசாயிகள் அதிக அளவில் கொய்யா பயிர் செய்துள்ளனர். தற்போது கொய்யா பழ சீசன் தொடங்கியுள்ளது.

இது குறித்து விவசாயி ஒருவர் கூறியதாவது.

பருவ நிலை மாற்றம் காரணமாக நடப்பாண்டில் கொய்யா விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் பழத்தின் விலையும் குறைந்துள்ளதால் நாங்கள் என்ன செய்வது என்று தெரியாமல் தவித்து வருகின்றோம். இதனால் 16 கிலோ கொண்ட ஒரு பெட்டி பழம் ரூ.200 முதல் 250 வரை விற்கப்படுகிறது.

இதில் பழங்களை விற்பனைக்காக சென்னை கோயம்பேடு மார்க்கெட்டுக்கு கொண்டு செல்வதற்கான லாரி வாடகை மற்றும் ஏற்றி, இறக்கும் கூலி, பழ கமிஷன் போக எங்களுக்கு ரூ.150 மட்டுமே கிடைக்கின்றன. கடும் வெயிலால்

பாதிப்படைந்த கொய்யா மரத்தினை பெரும் செலவு செய்து பராமரித்து வந்தோம். ஆனால் அதற்கு ஏற்றவாறு பழங்கள் விற்பனையாகவில்லை. தற்போது உள்ள சூழ்நிலையில் ஒரு பெட்டி பழம் ரூ.300 முதல் 350 வரையில் விற்றால் விவசாயிகளுக்கு ஓரளவுக்கு வருமானம் கிடைக்கும். இளவ்வாறு அவர் கூறினார்.

ஒறையூரில் அறுவடை செய்யப்பட்ட கொய்யாபழங்களை விவசாயி ஒருவர் தரம் பிரித்து பெட்டியில் அடுக்குவதை படத்தில் காணலாம்.

**வீராணம் ஏரி தூர்வாரப்படாததால் விவசாயிகள் கவலை**

சிதம்பரம்,

வீராணம் ஏரி தூர்வாரப்படாததால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

<u>வீராணம் ஏரி</u>

கடலூர் மாவட்டத்தின் மிகப்பெரிய நீர்ஆதாரமாக விளங்குவது வீராணம் ஏரியா. இந்த ஏரியின் மொத்த கொள்ளவு 47.50 அடியாகும். இந்த ஏரியை நம்பி சிதம்பரம், காட்டுமன்னா£கோவில் பகுதி டெல்டா விவசாயிகள் உள்ளனர். மேலும், வீராணம் ஏரி விவசாயத்திற்கு மட்டுமின்றி சென்னை மக்களின் குடிநீர் ஆதாரமாகவும் விளங்குகிறது.

இப்படி, பெருமைக்க ஏரி கடந்த 4 மாதங்களாக வறண்டு பாலைவனம் போல கிடக்கிறது. இந்த நிலையில், மேட்டூர் அணை 100 அடியை எட்டியதை தொடர்ந்து, காவிரி டெல்டா பகுதியில் ஆடிப் பெருக்கை கொண்டுவதற்காக கடந்த 27–ந் தேதி தண்ணீர் திறந்து விடப்பட்டது. இந்த நீர் கல்லணைக்கு 4, 5 தினங்களில் வந்து சேரும்.

ஆனால் வறண்டு கிடக்கும் வீராணம் ஏரியை, தண்ணீர் வருவதற்குள் தூர் வாரியிருந்தால் அதிக அளவில் தண்ணீரை தேக்கி வைத்து இருக்கலாம். ஆனால் ஏரி, தூர்வாரப்படாததால், குறைந்த அளவே தண்ணீரை தேக்கிவைக்க முடியும்.

இது குறித்து காவிரி டெல்டா விவசாய பாதுகாப்பு சங்க துணை தலைவர் கண்ணன் கூறியதாவது:–

வழக்கமாக ஜூன் 12–ந் தேதி மேட்டூரில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டு வீராணத்திற்கு ஜூலை 1–ந் தேதி தண்ணீர் வரும். சென்ற ஆண்டு செப்டம்படர் 17–ந் தேதி தான் தண்ணீர் பாசனத்திற்காக திறந்து விடப் பட்டது. ஆனால், இந்தாண்டு மேட்டூர் அணை நிரம்பி வருவதை கொண்டு ஆடிப் பெருக்கை மக்கள் கொண்டாடும் விதமாக தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

ஆகால், வீராணம் ஏரியை மார்ச் மாதத்துக்குள் தூர்வாரப்படும் என தமிழக அரசு உறுதியளித்தும். இதுவரை அப்பணிக்கான நிர்வாக ஒப்புதல்கூட வழங்காதது கடலூர் மாவட்ட விவசாயிகளுக்கு பெரிய ஏமாற்றத்தை அளிக்கிறது. ஏரி தூர்வாராததால் தண்ணீர் அனைத்தும் வீணாக கடலில் கலந்துவிடும் சூழ்நிலை உள்ளது. இவ்வாறு கண்ணன் கூறினார்.